
# ஹலால்

## நடைமுறையும் சவால்களும்




ஏபிஎம். இத்ரீஸ்

காகம்

# ஹலால்

## நடைமுறையும் சவால்களும்

ஏபிஎம். இத்ரீஸ்

காகம்

உலமா சபையின் வளர்ச்சிக்குப் பங்காற்றிய
ரியால் மௌலவி அவர்களின் நினைவாக

***Halal: Nadaimuraiyum Savalkalum***
*by*
*A.B.M. IDREES*

*Islamic Criminal Law ◖ First Edition: 2013 ◗ Copyright: Author*
*Pages: 32 ◖ Size: 14x21cm ◗ Publishing Serial No: 38*
*Published by: Kaham, Mahmood Alim Road, Valaichenai-05*
*Tel.: 94 777 141649 ◗ Email: abmmedia@gmail.com*
*Website: abm-media.com*
*Layout & Cover Designed by: Imdad, abm-media*
*Printed by: AJ Print, Station Road, Dehiwela*

***Rs. 80.00***

காகம் - உயிர்ப்பைத் தேடும் வேர்கள் என முன்பு அறியப்பட்டது.

# முன்னுரை

போருக்குப் பிந்திய இலங்கையில் அடுத்த தாக்குதல் இலக்காக முஸ்லிம்கள் மாறி வருகின்றனர். அண்மைய மர்ம மனிதன் சர்ச்சையிலிருந்து உலமா சபை எதிர்கொள்ளும் ஹலால் நெருக்கடிகள் வரை ஒரு நீண்ட நிகழ்ச்சி நிரல் நடந்தேறி வருகின்றது. ஹலால் நடைமுறைக்கு இலங்கை முஸ்லிம் பண்பாட்டில் ஒரு நீண்ட வரலாறு உண்டு. இலங்கை முஸ்லிம்களை இனச்சுத்திகரிப்பு செய்வதற்கோ, பலவந்தமாக வெளியேற்றுவதற்கோ போர்த்துக்கேய யுகத்திலிருந்து (பன்றிகளை வெட்டி முஸ்லிம்களின் கிணறுகளில் போட்டமை) மிகச் சக்திவாய்ந்த ஆயுதமாக ஹலால் கையாளப்பட்டு வருகின்றது.

அரை நூற்றாண்டுக்கு மேலாக இலங்கையில் இயங்கிவரும் உலமா சபை இரண்டாயிரத்துக்குப் பின்னர் முஸ்லிம் பண்பாட்டிலிருந்த இந்த ஹலால் நடைமுறைக்கு ஒரு நிருவாகப் பொறிமுறையை ஏற்படுத்தியிருப்பது தொடர்பான வாதவிவாதங்கள் மேலெழுந்து வருகின்றன. கிட்டத்தட்ட அந்த பண்பாட்டு உரிமை முஸ்லிம்களுக்கு முற்றாக மறுக்கப்படுமோ என அஞ்சுமளவுக்கு பதற்றம் தோன்றியுள்ளது. இந்நிலையில் நமது ஹலால் நடைமுறையை நமது பண்பாட்டு வரலாற்றின் பின்புலத்தில் வைத்துப் புரிந்து கொள்வதும் எதிர்காலத்தில் எந்தவகையான உபாயங்களை கையாள்வது தொடர்பாக இலங்கை முஸ்லிம்களும் அச்சமூகத்தின் சிவில் அமைப்பான உலமா சபையும் தம்மைத்தாமே சுயவிசாரணை செய்து கொள்ளும் வகையில் எனது இணையத்தளத்தில் எழுதியவற்றின் தொகுப்புத்தான் இதுவாகும்.

எந்தவொரு தனிநபரையோ அல்லது அமைப்பையோ குறிவைத்துத் தாக்கும் எந்த உள்நோக்கமும் எனக்குக் கிடையாது. கருத்தியல் மற்றும் செயல்வாத தளங்களிலேயே எனது விமர்சனங்களை முன்வைக்கின்றேன். இன்றிருக்கின்ற எல்லா இஸ்லாமிய புத்துயிர்ப்புவாத அணிகளுக்கும் மத்தியில் தம்மை அறியாமல் வஹாபிய மனநிலை எவ்வாறு உள்வாங்கப்பட்டுள்ளது என்பதை விளக்குவதற்காகவே வஹாபிய சிந்தனை வரலாற்றை ஓரளவு எடுத்தாள்கிறேன். அச்சிந்தனையின் நீட்சியாக இன்றைய சமூகமாற்றப் பணியை முன்னெடுப்பது விவேகமாக இருக்காது என்பதே என்தரப்பு வாதமாகும். ஆக, ஆளுமை அளிப்புத் தாக்குதல்களிலிருந்து விலகி கருத்தை கருத்தால் எதிர்கொண்டு விவாதித்து அதிலிருந்து வருகின்ற முடிவுகளை செயல்வாதமாக்கி முன்னகர்வதுதான் இன்றைய தலைமுறையின் தேவையாக இருக்கும் என நான் நம்புகிறேன்.

அன்புடன், ஏ.பி.எம். இத்ரீஸ்
11.03.2013

# வஹாபிய தூய்மைவாதமும் உலமா சபை எதிர்கொள்ளும் சவால்களும்

சமயத் தூய்மைவாதம், தீவிரவாதம், எளிமை ஆகிய அம்சங்களே வஹாபியத்தின் அடிக்கட்டுமானங்களாகக் கருதப்படுகின்றன. வஹாபியம் சமய உண்மைகளை நேர் பொருளிலேயே விளக்குகின்றது. அதனால் அக்கொள்கை விளங்குவதற்கும் அதன் பரவுகைக்கும் எளிதாக அமைந்தது. இஸ்லாம் எளிமையான மார்க்கம் என்பதை இப்பின்புலத்திலேயே அது விளக்கியது. சமய உண்மைகளுக்கு தமது நோக்கில் விளக்கமளிப்பதற்கும் சிலவற்றை சமயத்திற்கு எதிரானவை என்று நிராகரிப்பதற்கும் எளிமைக் கொள்கை அவர்களுக்கு சாதகமாக அமைந்தது. இது பிற்காலத்தில் முஸ்லிம்களுக்கு மத்தியிலும் அவர்களுக்கு வெளியிலும் ஓர் உளவியல் யுத்தமாக மாறியது.

சமயத்தை நேருக்கு நேராகவும் எளிமையாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற வஹாபிகளின் இறுக்கமான கோரிக்கையை செமித்திய மதங்களின், பண்பாடுகளின் பின்புலத்திலிருந்தே நாம் நோக்க வேண்டும். எல்லா உண்மைகளையும் அர்த்தங்களையும் எளிமையாகக் காண்பதில் வஹாபிகள் பிடிவாதமாக இருந்தனர். அதனால் இஸ்லாமிய புனிதப் பிரதிகளின் ஒளியில் தோன்றிய தர்க்கவியல், தத்துவம், உருவகம், மொழி அழகியல், குறியீடு போன்றவற்றால் வஹாபிகள் சினமூட்டப்பட்டனர். 'தூய இஸ்லாத்தின் பக்கம் திரும்புங்கள்' என்பதே வஹாபிகளின் சர்வதேச அழைப்பாகும். ஆனாலும் வஹாபியம் வேறுபல கூறுகளையும் சமாச்சாரங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதையும் நாம் மறந்துவிடலாகாது. அதில் அரபுத் தேசியவாதமும் ஒன்றாகும். அரபுத் தேசங்களில் பரவிய துருக்கிய, பாரசீக ஆதிக்கத்தையும் அவர்களின் சமயக் கொள்கைகளையும் மறுவாசிப்புக்களையும் முற்றாக எதிர்த்தது. இவற்றுக்கு எதிராக அரபு மண்ணில் எழுந்த அரபிஸத்திற்கு வஹாபியம் உறுதுணையாக இருந்தது. அரபு மண்ணிலிருந்து துருக்கியை வெளியேற்றியதில் வஹாபியத்திற்கு நேரடியான பங்கிருந்தது. மக்காவில் துருக்கியரால் கட்டப்பட்ட பழம்பெரும் கோட்டையும் அண்மையில் உடைக்கப்பட்டுவிட்டது.

வஹாபிய எழுச்சி ஐக்கிய அரபுத் தேசத்தையும் அரபு மைய அதிகாரத்தையும் வலுப்படுத்தியுள்ளது. மத்தியகிழக்கில் நிலைத்து வாழ்ந்தோரும் அசையும் நாடோடிச் சமூகங்களுக்குமிடையில் எழுந்த முரண்பாடுகளையும் மோதுகைகளையும் அழித்தொழிப்பதில் வஹாபிய

இயக்கம் வெற்றிபெற்றுள்ளது. வஹாபியத்தின் எழுச்சி ஒரு தற்செயல் நிகழ்வோ, சமயத்தை மட்டும் இலக்காகக் கொண்டதோ அல்ல. ஏறத்தாழ 300 ஆண்டுகள் நஜ்த் பிராந்தியத்தில் ஏற்பட்டுவந்த சமூக, அரசியல் மோதுகைகளின் விளைவுகளிலேயே இதன் தோற்றமும் வளர்ச்சியும் இடம்பெறுகின்றது. அசையும் நாடோடிச் சமூகங்களுக்கு எதிராக நிலைத்து வாழ்வோர் அணிதிரண்டு போராடியதே வஹாபிய வரலாறாகும். பொருளாதார நெருக்கடி, விவசாயப் பிரச்சினைகள், சமயப் பண்பாட்டு நெருக்கடிகள் யாவும் வஹாபியப் போராட்டத்தில் கலந்திருந்தன.

நிலைத்து வாழ்வோரின் நகரமயமாக்கமும் நகர்ப்புற நாகரிக அபிலாஷைகளும் வஹாபிய சமயத் தூய்மைவாதத்துடன் முரண்பட்டு நின்றன. ஆலிம்களின் தீவிரப் போக்கும் அசையும் நாடோடிகளின் கிராமிய மனப்பாங்கும் வஹாபியத்துக்குள் உள்முரண்பாடுகளைத் தோற்றுவித்தன. வஹாபியத் தூய்மைவாதம் பிற்போக்கிற்கு இட்டுச் செல்லும் இறுக்கமான சமயக்கட்டுப்பாடுள்ள வாழ்க்கைக்கு இஸ்லாத்தைப் போதிக்க தயாராக இருந்தது. நவீன தொழில்நுட்ப முன்னேற்றகர யுகத்தில் பின்னோக்கிச் செல்லும் உத்தியின் மூலமே சமயத்தில் உறுதிப்பாட்டைத் தோற்றுவிக்கலாம் என்பதை வஹாபியம் உறுதியாக நம்பியது.

ஆனால் இதற்கு எதிரான நிலைப்பாடு வஹாபியத்தின் உட்கட்டமைப்பிலிருந்தே உருவாகியது. நிலைத்து வாழ்வோரின் நாகரிக உணர்வு வஹாபியத்தில் வெற்றிகண்டதை 1929 இல் அப்துல் அஸீஸின் படைகள் வெற்றிபெற்றதில் அவதானிக்கலாம். சமூகக் கட்டமைப்பிலும் கருத்தியலிலும் மாற்றங்களை ஏற்படுத்தாது புதிய நாகரிக உற்பத்திகளை நுகர்வதற்கு வஹாபிய சஊதி அரசு தயாராக இருந்தது. இதற்கு வஹாபிய சமயத் தூய்மைவாதிகள் எதிர்ப்புக்காட்டினர். ஆகாயவிமானத்தையும் தொலைபேசியையும் இவர்கள் பித்அத் பட்டியலில் இணைத்த அபத்தங்கள் அங்கே நிகழ்ந்தன. பித்அத்துக்கு அவர்கள் வழங்கிய விளக்கங்கள் அதன் எல்லைகளையும் தாண்டிச் சென்று சமூக நடவடிக்கைகளிலும் மானிட முன்னேற்றங்களிலும் நவீனத்துவ நோக்குகளிலும் தலையிட்டது. வஹாபியத்துக்குள்ளே தோன்றிய முன்னேற்றத்திற்கெதிரான சக்திகளுடன் வஹாபியமே போராட வேண்டியிருந்தது.

விஞ்ஞானத் தொழில்நுட்பக் கல்வியையும் அது உருவாக்கிக் கொடுக்கும் கருவிகளையும் வஹாபிய தீவிரவாதிகள் கடுமையாக எதிர்த்தனர்.

இசைக்கும் அழகியலுக்கும் எதிராக அவர்கள் போர்க்கொடி தூக்கினார்கள். பல நூற்றாண்டுகள் பின்னோக்கிச் செல்லும் அரபு நாடோடித்துவ பிற்போக்கு யுகத்திற்கேற்ற கோட்பாடாக இஸ்லாத்தை அவர்கள் உருவகித்துக் காட்டினர். கவினுறு கலைகள், விஞ்ஞானம், தொழில்நுட்பம், மெய்யியல், சமூகவியல், விளிம்புநிலை மக்களுக்கான இடம் உட்பட பல்வேறு துறைகளையும் கொண்ட இஸ்லாத்தின் பரந்த நாகரிக மரபுகள் ஒதுக்கப்படுவதையும் ஓரங்கட்டப்படுவதையும் வஹாபிகள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

சமாதிகளையும் கபுறுகளையும் சுவடே தெரியாமல் அழித்தொழிப்பதில் வஹாபிகள் கட்டற்ற தீவிரவாதத்தை வெளிப்படுத்தினர். பதினாலு நூற்றாண்டுகால இஸ்லாத்தின் பண்பாடுகளையும் நாகரிக எச்சங்களையும் பிரதிபலிக்கக்கூடிய ஒரு சிலவற்றையாவது விட்டுவைக்க வேண்டும் என்பதற்கு அவர்கள் இணங்க மறுத்தனர். 1800 களின் ஆரம்பத்தில் நபிகளின் சமாதி மண்டபத்தை உடைப்பதற்கு அவர்கள் முடிவெடுத்த போது அதற்கெதிராக உலக முஸ்லிம்கள் எதிர்ப்புக்காட்டினர். 1920 களில் மீண்டும் உடைப்பதற்கு முயற்சித்த போது இந்தியாவின் கிலாபத் இயக்கம் அதனைக் கடுமையாகக் கண்டித்தது. 1950 களில் இந்திய இஸ்லாமிய அறிஞர் அபுல் ஹஸன் அலி நத்வி, இஸ்லாமிய மரபுச் சின்னங்களின் வரலாற்று முக்கியத்துவத்தை வலியுறுத்திப் பேசினார்.

சமாதிகளிலும் கபுறுகளிலும் நடாத்தப்பட்ட அனாச்சாரங்களையும் மூட நம்பிக்கைகளையும் கட்டுப்படுத்துவதிலும் இல்லாதொழிப்பதிலும் வஹாபிகள் உண்மையில் ஒரு முற்போக்கான பங்கை ஆற்றினர். போலி அவுலியா வழிபாட்டினால் வளர்ந்த மௌட்டீகம் இஸ்லாத்தினை எவ்விதத்திலும் பிரதிபலிக்கவில்லை. மத்ஹபுகளுக்கு முற்றிலும் கட்டுப்பட்டிருந்த முஸ்லிம் உலகை அவர்கள் விடுதலை செய்தனர். கண்மூடிப் பின்பற்றுவதை கைவிடுமாறு அழைப்பு விடுத்தனர். ஒரு முஸ்லிம் எந்தவொரு விடயத்தைப் பேசினாலும் ஆதாரத்தோடு பேசவேண்டும் என்பதை வலியுறுத்தினர். இஜ்திஹாதுக்கு, தனிநபர் சுதந்திர சமயத்தீர்ப்புக்கு இடமுண்டு என்பதை உறுதிப்படுத்தினர். ஆனால் இவை மத்ஹபு வாதிகளின் கடும்போக்கிற்கு எதிராக அமைந்த போதிலும் நவீன உலகிற்கு ஏற்றவாறு இஸ்லாத்தை விளக்கும் பணியில் அவர்கள் பங்காற்றவில்லை என்பது முக்கியமாகும்.

ஆனால் முஸ்லிம்களையே முஸ்லிம்களுக்கு எதிராக கொண்டுபோய் நிறுத்துவதற்கும் தூய இஸ்லாத்தை கடைப்பிடிக்க வில்லை என்ற உளவியல் யுத்தத்தை இன்றுவரை நடத்திக் கொண்டிருப்பதற்கும்

முஸ்லிம்களின் வரலாற்றுச் சின்னங்களை அழித்தொழித்து வரலாறற்ற சமூகங்களாக அவர்களை மாற்றுவதிலும் வஹாபிகளுக்கு மகத்தான பங்குண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது.

முஹம்மத் பின் சுஊதின் அரசியல் அபிலாஷைகளுக்கும் அப்துல் வஹாபின் சமயத் தூய்மைவாத மறுமலர்ச்சித் திட்டங்களுக்கும் இடையிலான பரஸ்பர உடன்படிக்கைகளும் ஒத்துழைப்புக்களின் ஊடாகவே இவை அனைத்தும் நடந்தேறின. எண்ணைவளக் கண்டுபிடிப்பும் செல்வப் பெருக்கமும் நவீனத்துவத்துடன் அரேபியா இணைவதை துரிதப்படுத்தின. விஞ்ஞான தொழில்நுட்ப உதவிகளுக்காகவும் உலக வர்த்தகத்தில் பங்குகொள்வதற்காகவும் சஊதி பிரித்தானியாவையும் அமெரிக்காவையும் நாடவேண்டி இருந்தது. மன்னர் சுஊதுக்குப் பின்னர் அப்துல் அஸீஸ், பைசல், பஹ்த் என மன்னராட்சியும் தொடர்ந்து வந்தது. இவர்கள் தாராளவாத கொள்கையை அனுஷ்டித்ததுடன் நாட்டை நவீனப்படுத்தும் திட்டங்களுக்கும் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்தனர். சர்வதேச சட்டங்களிலும் வர்த்தக ஒழுங்குகளிலும் நாட்டின் முன்னேற்றத்திற்கு ஏற்ற வகையில் ஷரிஆச் சட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்தினாலும் குற்றவியல், சிவில், தனிநபர் சட்டங்களில் மாற்றங்களைச் செய்யவில்லை. இப்னு தைமியாவின் சிந்தனைகளும் இப்னு கய்யிம் அல் ஜவ்ஸியின் இறையியலும் ஹன்பலி சட்டவியலும் தான் அப்துல் வஹாப் (1703-1792) அவர்களை சமயத்தூய்மைவாதத்தை நோக்கி ஆழமாக வழிநடாத்தியதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஏனெனில் இவர் பிறந்த நஜ்த் பிரதேசத்தில் ஹன்பலி சட்டமரபு காணப்பட்டமையும் அம்மரபையே அவர் ஆரம்பக் கல்வியாகப் பெற்றமையும் இதற்கான பின்புலமாகும். ஹன்பலி மத்ஹபு தனியார் சட்டங்களில் ஏனைய முஸ்லிம் சட்டப்பள்ளிகளைவிட மிகவும் பழமைவாத தன்மை கொண்டதாக இருந்தது.

இதே காலப்பிரிவில் இலங்கையிலும் மற்றெல்லா சமூகங்களையும் போல இஸ்லாமிய சமூக மறுமலர்ச்சிக்கான முன்னெடுப்புக்களும் போராட்டங்களும் மேற்கிளம்புவதை அவதானிக்கலாம். மேற்கத்திய காலனித்துவ அபாயத்திலிருந்து தற்காத்துக் கொள்ளும் நோக்கோடு இலங்கை முஸ்லிம் சமூகம் பல படிநிலைகளில் தன்னைத் தயார்படுத்திக் கொள்கின்றது. இஸ்லாமியச் சூழலில் மேற்கத்திய கல்விமுறையை முஸ்லிம் பண்பாட்டுக்குள் உள்ளீர்க்கின்ற பணியை அறிஞர் சித்தி லெவ்வை மேற்கொள்கின்ற அதேவேளை மாப்பிள்ளை லெப்பை ஆலிம் இஸ்லாமிய சமய பண்பாட்டுக்குள் தன்னை உட்படுத்திக் கொண்டு புதிய

யுகத்திற்கேற்றவாறு இலங்கையின் பல்பண்பாடுகளையும் அனுசரித்த நிலையில் மத்ரஸாக் கல்வி முறையைத் தோற்றுவிக்கின்றார். 19 ஆம் நூற்றாண்டில் மேற்குக் கரையில் தோன்றிய இக்கலாசாலைகள் 1950 களுக்குப் பின் கிழக்குப் பகுதியிலும் பரவ ஆரம்பிக்கின்றன. இஸ்லாமிய பாரம்பரிய கலாநிலையங்களில் கற்று வெளியேறிய ஆலிம்கள் அல்குர்ஆன், ஹதீஸ் ஆகிய இரு துறைகளோடு மட்டும் தமது பயில்வை சுருக்கிக் கொள்ளாது பதினான்கு நூற்றாண்டுகளாக தோன்றிய பல துறைகளையும் கற்றவர்களாக வெளியேறினர். இதனால் இலங்கையில் வாழ்ந்த ஏனைய பண்பாடுகளுக்கு இடையில் முரண்பாடுகள் எழா வண்ணம் சகவாழ்வுப் போக்கிலேயே தமது சமய சிந்தனைகளை முன்வைத்து வந்தனர்.

ஆனால் ஐம்பதுகளுக்குப் பின் மத்திய கிழக்கில் தோன்றிய எண்ணெய்வளப் புரட்சியும் செல்வப் பெருக்கமும் காலனித்துவத்திற்கு நீண்டகாலம் உட்பட்டு சுரண்டப்பட்ட இலங்கையிலிருந்து ஆன்மீகம், கல்வி, பொருளாதாரம் இன்னபிற தேவைகளுக்காக மத்தியகிழக்கு நாடுகளுக்கு பயணிக்கும் நிலை ஏற்படுகின்றது. மத்திய கிழக்கில் தோன்றிய வஹாபிய மறுமலர்ச்சிச் சிந்தனையும் அதில் இழையோடும் இஸ்லாமியத் தூய்மைவாதமும் இலங்கை சமூகத்திற்குள்ளும் படிப்படியாகக் கடத்தப்படுகின்றது. யாரை ஒன்றிணைத்தாலும் ஆலிம்களை ஒன்றிணைக்க முடியாது என்று கருதப்பட்ட ஒரு சூழலில் ரியால் மௌலவி போன்ற ஒரு சில ஆலிம்களின் அர்ப்பணிப்புக்களின் காரணமாக முஸ்லிம் சமூகத்தின் செல்வாக்குப் பெற்ற சிவில் அமைப்பாக உலமா சபை உருவாகின்றது. இரண்டு தசாப்தங்களுக்கு முன்பே தனக்கான காரியாலயத்தை கொழும்பில் அமைத்துக் கொண்ட அது, அதற்கு முன்னர் ரியால் மௌலவி அவர்களின் கைப்பையிலேயே இயங்கி வந்தது இங்கு குறிப்பிட வேண்டிய வரலாற்றுண்மையாகும். அந்தளவு பல தியாகங்களுக்கு மத்தியில் மத்ரஸாக்களில் எட்டு வருடங்களை கழித்துவிட்டு வெளியேறுகின்ற மௌலவிமார்களின் மேலதிகக் கல்வி, தொழில் போன்ற பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையில் இலங்கை உலமா சபை கணிசமான பங்களிப்பை வழங்கியதை யாரும் மறுக்கமுடியாது. அல் ஆலிம் பாடத்திட்டம், இலங்கை பாடசாலையின் இஸ்லாம், அரபு கலைத்திட்டம் போன்றவற்றோடு முஸ்லிம்களின் தொழுகை நேரசூசி, பெருநாட்கள், பிறை விவகாரம் போன்ற பண்பாட்டு விடயங்களில் தேசிய ஒருமைப்பாட்டைப் பேணுவதிலும் அது மிகவும் கரிசனை கொண்டிருந்தது.

ஆனால் இலங்கையின் அரசியல்வாதிகளும் முஸ்லிம் வர்த்தக

மேட்டுக்குடிகளும் விடுத்த சவால்களைவிடவும் இலங்கையில் உருவாகிய வஹாபிய சக்திகள் உலமா சபையை பலவீனப் படுத்துவதில் பல அந்தர் பெல்டிகளை அடித்துள்ளனர். பன்முகத் தன்மையான பல்பண்பாடுகள், பல் மொழிகள், பல்வகைச் சமூகங்கள் வாழ்கின்ற ஒரு நாட்டில் தட்டையான, ஒருதலைப்பட்சமான போக்கிலேயே அதன் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்பதில் வஹாபிகள் உறுதியாக இருந்து வந்துள்ளனர். இன்றும் கூட பொதுபல சேன குறிவைத்திருப்பது வஹாபிஸத்தையே அன்றி உலமா சபையை அல்ல. ஆனால் துரதிஷ்ட வசமாக குறிவைக்கப்பட்டவர்கள் உலமா சபைக்கு வெளியிலேயே நிற்கின்றனர். இந்த இரண்டக நிலையை நாம் விளங்கிக் கொள்வது மிகவும் முக்கியமாகும். இன்று உலமா சபைக்கு வஹாபிய முகமூடி அணிவிக்கப்பட்டிருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதை மிகச்சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். வஹாபியம் வேறு இலங்கை பாரம்பரிய இஸ்லாமிய சிந்தனை மரபு வேறு என்பதை பொதுக்களத்தில் வெளிப்படுத்துவதில் உலமா சபை பின் நின்றதாலும் அண்மையில் இன, மத பேதமில்லாது எதிர்க்கப்பட்ட ரிசானா விவகாரத்தில் உலமா சபை காத்த மௌனமும் எவ்வளவு பேராபத்தில் அவர்களைச் சிக்கவைத்திருக்கிறது என்பதை இன்னும் அவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

குனூத், தொப்பி, விரலாட்டுதல், தராவீஹ் என எண்ணற்ற மார்க்கத்தின் கிளைப் பிரச்சினைகளில் சொல்லொண்ணா நெருக்கடிகளை இலங்கை முழுவதும் உருவாக்கி, பள்ளிவாயல்களையும் பிரித்து தனியான பள்ளிவாயல்களையும் உருவாக்கி பொலிஸ் ஸ்டேஷன் வரை கொண்டு சென்று முஸ்லிம்களை கைகட்டி, வாய்பொத்தி நிற்கவைத்து, சிறையிலும் அடைத்து (பேருவளைச் சம்பவம்) இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் கேவலப்படுத்திய துர்ப்பாக்கியமான சூழ்நிலையை உருவாக்கிய வஹாபிய தூய்மைவாதத்தை மிகச்சரியாக இனங்கண்டு உலமா சபை எதிர்வினையாற்றவுமில்லை. அவர்களை அறியாமலேயே வஹாபியத்தின் தூய்மைவாத நோக்குமுறைக்குள் அவர்களை உட்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். தெரிந்தோ தெரியாமலோ ஹராம்-ஹலால் தூய்மைவாதம் இந்த வரலாற்றுப் போக்கில் அறியாமல் உள்வாங்கப்பட்டதே. நீண்டகாலமாக முஸ்லிம் புலமைத்துவ வட்டாரத்தில் விவாதிக்கப்பட்டு வந்த கருத்தாக்கமாக அது இருக்கவில்லை. அப்படி இருந்திருந்தால் அதை நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறை நீண்டகால நோக்கில் சிக்கல்கள் எழாதவாறு அமைக்கப்பட்டிருக்கும்.

அரை நூற்றாண்டுக்கு மேலாக உலக விவகாரங்களிலே கிஞ்சிற்றும் அக்கறை செலுத்தாத, பள்ளிவாசலுக்குள் உலக விவகாரங்களைப் பேசினாலே நாற்பது நாள் செய்த அமல் போய்விடும் என்று கடைசி வரைக்கும் சொல்லிக் கொண்டு செயல்வாதிகளாக இருந்த தப்லீக் இயக்கம் ஒரு தசாப்தத்திற்கு முன்னால் உலமா சபையை கைப்பற்றுவதை யாராலும் தவிர்க்க முடியவில்லை. இதுவும் கூட வரலாற்றுப் போக்கில் வஹாபியம் கொடுத்த அழுத்தம் காரணமாக தன்னைத் தக்கவைப்பதற்கு தப்லீக் தேடிக்கொண்ட புகலிடமாக உலமாசபை மாறுகின்றது. அப்போதுதான் அவர்கள் தம்முடைய நிகழ்ச்சி நிரலில் இல்லாத இலங்கை முஸ்லிம்கள் அரசியல், பண்பாட்டு ரீதியாக எதிர்கொள்ளும் பல சவால்களுக்கு முகம்கொடுக்க ஆரம்பிக்கின்றனர். அதற்குரிய முதிர்ச்சியும் அதனிடம் இருக்கவில்லை.

பொதுமைப்படுத்தப்பட்ட இலங்கையின் எல்லா முஸ்லிம்களையும் பிரதிநித்துவப்படுத்தும் உலமா சபைக்கு அத்தகைய புலமைச் சாகித்தியம் கொண்ட தலைமையே பொறுப்பேற்றிருக்க வேண்டும். ஆனால் இலங்கையின் பல்பண்பாட்டை புரிந்து கொண்ட ஆலிம்சாக்களை கணிசமாகக் கொண்டிருந்த ஒரு சூழலில் தெளிவில்லாத ஆலிம்கள் வந்தமரக்கூடிய இடமாக உலமா சபை மாறியமை இஸ்லாமிய புலமைத்துவத்தின் கையறு நிலையையும் நீண்டகாலமாக முஸ்லிம்களை பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கும் வஹாபிய பிசாசின் பித்தலாட்டமுமே காரணம் என்பதை வரலாறு நிரூபித்துக் கொண்டிருக்கிறது. ஆழமான இஸ்லாமிய புலமைத்துவவாதிகள் உலமா சபைக்கு வெளியே இருப்பது மட்டுமல்ல இலங்கையிலுள்ள இஸ்லாமிய இயக்கங்களுக்கும் வெளியேதான் இருக்கிறார்கள். இலங்கை அனுபவத்தில் பெரிய இஸ்லாமிய புலமைத்துவவாதிகளை திட்டமிட்டு உருவாக்கிய வரலாறுகளும் இல்லை. அவர்களாக சுயமாக வாசித்து பல்வேறு அனுபவ பட்டறிவுகளுடன் உருவாகிக் கொண்டால்தான். இறுக்கமான இயக்க கட்டமைப்புகளும் ஆழமான இஸ்லாமிய புத்திஜீவிகளை உள்வாங்கிக் கொள்வதற்கான நெகிழ்வுத் தன்மைகளும் இல்லாதிருப்பதே இதற்கான காரணமாகும்.

கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்காக தொடங்கப்பட்ட முஸ்லிம் அரசியல் இயக்கம் எவ்வாறு மேற்கில் பெருந்தேசிய வாதங்களுடன் அல்லது முஸ்லிம் மேட்டுக்குடி வர்த்தக சமூகங்களுடன் சராணகதி அடைந்ததோ அதே போன்றுதான் இலங்கை முழுவதும் பரந்து வாழும் முஸ்லிம் சமூகத்தின் சிந்தனைக் கட்டுக்கோப்பையும் பல்பாண்டுகளுக்கு மத்தியில் சகவாழ்வை மேற்கொள்வதற்கான

காலத்துக்கேற்ற சமய சிந்தனைகளையும் மறுசீரமைப்புச் செய்ய வேண்டிய இலங்கை உலமா சபை தொடர்ந்தும் மேற்குப் பகுதி ஆலிம்களாலேயே இதுவரை வழிநடாத்தப் படுகின்றது. இஸ்லாமிய யுத்த தர்மங்களையே ஒட்டுமொத்தமாக மறந்து கிழக்கில் என்னதான் இழப்புக்கள் இருந்தாலும் தொப்புள்கொடி உறவாக இருந்த தமிழ்-முஸ்லிம் உறவை அறுத்தெறியும் நடவடிக்கையாகவே உலமா சபை ஜெனீவா சென்று வக்காலத்து வாங்கியதையும் அதற்குப் பின்னால் இருக்கும் சமய சந்தர்ப்பவாத அரசியலையும் ஒதுக்கிவிட்டு எவ்வாறு பார்க்க முடியும்? இலங்கை முஸ்லிம்களின், மற்ற சமூகங்களின் எல்லா விடயங்களிலும் தொடர்ச்சியான ஊடாட்டம் இருந்து ஒரு முடிவை எடுப்பதற்கும் சிறுபான்மைச் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற உலமாசபை போன்ற அமைப்பு திடீரென ஒரு தரப்புக்குச் சார்பாக நிலைப்பாடு எடுப்பதற்கும் வித்தியாசம் இருக்கின்றது.

இன்று உலக அளவில் நடைபெற்று வரும் மாற்றங்களை விளங்கிக் கொள்வதிலும் உலமா சபை பின்னுக்குத்தான் நிற்கின்றது. இலங்கை போன்ற தென்னாசிய நாடுகள், அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற வல்லரசு சக்திகளுக்கு மத்தியில் ஒரு அதிகாரப் போட்டிக்குரிய களமாக எவ்வாறு மாறிவருகிறது என்பதை புரிந்து கொள்ளவில்லை. சீனப் பொருளாதாரம், சீன-இலங்கை சமயத் தொடர்புகள், பௌத்த சமூகங்களுக்கு மத்தியில் அது உருவாக்கி வரும் சமயவாதங்கள் குறித்த விரிவான புரிதலுக்குரிய தளங்களையோ, வாதவிவாதங்களையோ, அவற்றுக்குரிய புத்திஜீவித்துவ மட்டங்களையோ இதுவரை உலமா சபை உருவாக்கிக் கொள்ளவுமில்லை.

இலங்கையின் மத்ரஸா வரலாறு கூட குறிப்பிட்ட இயக்கங்களின் சிந்தனைகளை விரிவாக்கம் செய்வதற்காகவே உருவாக்கப்படுகின்றன என்ற உண்மை புரியப்பட்டு பொதுத் தளத்திற்கான இஸ்லாமிய மத்ரஸா கலைத்திட்டத்தை உருவாக்கும் பணியிலோ அவற்றைப் பயில்நிலைக்கு கொண்டுவரும் நிலையிலோ இதுவரை உலமா சபை காத்திரமான முறையில் இயங்கவில்லை. உலமா சபையின் தலைமை மட்டுமல்ல, அதன் நிருவாகக் கட்டமைப்பு இலங்கையின் பல பாகங்களையும் உள்ளடக்கியதாக தகைமை, தலைமைக் காலம் வரையறுக்கப்பட்டு ஆலிம்களின் வாக்கெடுப்புக்கள் பரிந்துரைகளுக்கு மத்தியில் தெரிவு செய்யப்படும் நிலையும் இதுவரை காணப்படவில்லை. உலமா சபை இலங்கை முஸ்லிம்களின் மிகவும் பொறுப்புவாய்ந்த சிவில் சமூகக் கட்டமைப்பு என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. அது ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் அல்லது நகர்ப்புற மேட்டுக்குடி வலதுசாரி உலமாக்களின்

ஆடுகளமாக மாறிவிடக்கூடாது.

இந்த ஹலால் கருத்தியலைக்கூட இதுவரை மிகச்சரியாக முன்வைத்து உரையாடவில்லை என்பதுதான் உண்மை. மனித ஆரோக்கியத்திற்கான இஸ்லாமிய கோட்பாடுதான் ஹலால் என்பது. அதை வைத்து பிழைப்பு நடத்துகின்ற ஒரு கும்பலை இஸ்லாத்தின் பெயரால் உருவாக்குவது நீண்டகாலத்தில் எத்தகைய துஷ்பிரயோகங்களை உருவாக்கிக் கொடுக்கும் என்பது ஒருபுறமிருந்தாலும் போர் முடிவுற்று நான்காண்டுகளுக்குப் பிறகும் அடுத்த சிறுபான்மையான முஸ்லிம்களை கருவறுக்க காத்திருக்கும் ஒரு சூழ்நிலையில் நாம் அறியாமல் உள்வாங்கி இருக்கும் வஹாபியத் தூய்மைவாதம் ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் காவுகொள்கின்ற நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதே தற்போதைய இலங்கை நிலவரமாகும். நிருவாகக் கட்டமைப்பில், ராணுவத்தில், ஊடகத்துறையில், கல்வியில் உறுதியாக கால்பதித்திருக்கும் பெருந்தேசியவாத வர்க்கங்கள் அடுத்து முன்னேற துடியாய்த் துடிப்பது பொருளாதாரமே. அந்தப் பொருளாதாரத்திற்கு முட்டுக்கட்டையாக அமையும் ஹலால் தூய்மைவாதத்தை தூக்கி எறிவதற்கோ அல்லது தமக்குச் சார்பாக பயன்படுத்திக் கொள்வதற்கோ தயங்கமாட்டார்கள்.

ஒரு குறித்த காலத்தில் ஆட்சியிலிருக்கும் அரசையோ அரசியல்வாதிகளையோ மட்டும் உலமா சபை இன்னும் நம்பி ஹலால் தொடர்பான கணக்கறிக்கைகளை சமர்ப்பித்துக் கொண்டிருக்க முடியாது. அது நீண்டகாலத்தில் சாதகமான முடிவையே தரும் என எதிர்பார்க்கவும் முடியாது. பொதுவாக போர் முடிந்துவிட்டாலும் இனத்துவ அரசியலும் பௌத்தமயமாக்கலும் காணப்படுவதால் ஹலால் தூய்மை வாதத்தை ஒரு நிறுவன முறையாக தொடர்ந்தும் தக்கவைப்பதற்கான சாத்தியமான வழிகளை பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. ஹலால் விவகாரம் முடிவதோடு பிரச்சினை முடிந்துவிடும் என்பதல்ல. அடுத்தடுத்து குறிவைக்கப்பட்டிருக்கும் இஸ்லாமிய தூய்மைவாத இலக்குகள் குறித்தும் அழுத்தங்கள் வரலாம் என்பதைப் பற்றியும் சிந்திக்க வேண்டி இருக்கிறது.

நூற்றாண்டு காலமாக பல்பண்பாடுகளுடன் புளங்கிய சோனக முஸ்லிம் பண்பாட்டு வெளியின் முகம் திடீரென மாற்றமடைவதையும் இங்கு கவனப்படுத்த வேண்டியுள்ளது. உடல் மொழி, தொப்பி, நீண்ட தாடி, நீண்ட அங்கி, கறுப்பு ஹிஜாப், முகத்திரை, கையுறை, புதிய பள்ளிவாயல் என தடாலடியாக மாற்றியமைக்கப்பட்டு வரும் முஸ்லிம் பண்பாட்டு வெளி பெரும்பான்மை சமூகங்களின் மனத்தில் பேரச்சத்தை உருவாக்கி

வருகிறது. அடையாளத்தையும் தூய்மைவாதத்தையும் அளவுக்கதிகமாக தூக்கிப்பிடிக்கும் போது மற்றமைகள் வெறுக்கப்படுவதும் மிரள்வதும் இயல்பே. இது பெருந்தேசிய குழுக்கள் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் எதிர்ப்பதற்கு ஏதுவாகவும் அமைந்துவிடுகிறது. எந்தவொரு செயல்திட்டத்திலும் மக்கள் பங்கேற்பும் அரச ஆதரவும் இருப்பதே விவேகமானது. இல்லாவிட்டால் அது ஒரு குழுசார்பானதாக மாறிவிடும். உணர்ச்சிகரமான நிலையில் வஹாபியத் தூய்மைவாதத்திற்குச் செல்லாமல் மற்றமைகளையும் கருத்திற்கொண்டு செயற்படுவதே பொருத்தமானது. மேலும் மேலும் முஸ்லிம் சமூகத்தை தனிமைப்படுத்துவதற்கான தூய்மைவாத இலக்குகளைப் பற்றி ஆராயாமல் மற்றமைகளுடன் கலந்து ஊடாடி பண்பாட்டு புரிதலை உருவாக்குவதே எதிர்காலத்தில் ஆரோக்கியமானது.

## ஹலால்–ஹராம்: விரிவும் ஆழமும் வேண்டி

ஹராம்-ஹலால் விவகாரம் ஆதம் ஏவாளுடன் தொடங்கிவிட்டதாகவே முஸ்லிம் தொன்மவியலாளர்கள் கூறுகின்றனர். தடுக்கப்பட்ட மரமும் அதன் கனிகளிலுமிருந்தே ஹராம்-ஹலால் வரலாறு தொடங்குவதாக இவர்கள் கருதுகின்றனர். ஆதமும் ஏவாளும் வாழ்ந்த சுவனம் என்பதும் மனிதன் வாழ்வதற்கான அனைத்து வாழ்வாதார வசதிகளையும் கொண்டமைந்த ஒன்றாகவே அல்குர்ஆன் அத்தொன்ம வரலாற்றை சித்தரிக்கும் போது வெளிப்படுத்தியுள்ளது. உணவு உற்பத்திக்குத் தேவையான நீர்வளமும் நிலவளமும் காலநிலையும் சூழமைந்த இடமாகவே சுவனத்தைப்பற்றிய சித்தரிப்புக்கள் காணப்படுகின்றன. இரு தோட்டங்களின் சொந்தக்காரனின் கதையாக இருந்தாலும் விவசாயப் பண்ணைகளை வைத்திருந்த ஒரு தந்தையின் பிள்ளைகளின் கதையாக இருந்தாலும் சரி இவை எல்லாவற்றிலும் சுவனம் என்ற பதம் மனிதனின் வாழ்வாதாரத்திற்கான அனைத்து வசதிகளையும் கொண்ட இடமாகவே வர்ணிக்கப்பட்டுள்ளது. அதில் ஒரேயொரு மரத்தைத் தவிர மற்ற அனைத்தும் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் ஹலால் என்றே அறிவிக்கப்படுகின்றது. இப்பூமியில் மனித வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கான ஒரு குறியீட்டு அனுபவமாக கூறப்படுகின்றது. தடுக்கப்பட்ட மரம் ஹராமுக்கான குறியீடாகவும் தடுக்கப்படாத ஏனைய அனைத்தும் ஹலாலுக்குரிய குறியீடாகவும் மாறுகின்றது. அதாவது மனித உடலுக்கு உகந்த, அதன் வளர்ச்சிக்கு உதவக்கூடிய அனைத்தும் ஹலால்

என்பதும் மனிதனின் உடலுக்கும் உணர்வுக்கும் ஊறுவிளைவிக்கக் கூடிய ஏனையவை ஹராம் என்றும் இக்குறியீட்டுச் சம்பவம் உணர்த்தி நிற்கின்றது.

அளவுகளில் வகைமைகளில் வித்தியாசங்கள் இருந்தாலும் எல்லாப் பண்பாடுகளிலும் ஹலால்-ஹராம் என்ற சமூக வழமைகள் காணப்படுகின்றன. பெரும் சமயங்களான இந்து, பௌத்தம், இஸ்லாம், யூதம், கிறிஸ்தவம் போன்றவற்றில் மட்டுமல்லாது பழங்குடிச் சமூகங்களிலும் இன்றும் இவற்றை அவதானிக்க முடியும். இத்தகைய சமூக வழமைகள் மனித சமூகம் நாகரிகமடையும் போது அவை உள்ளார்ந்த நெருக்கடிகளை எதிர்கொண்டு புதிய ஒழுங்கமைவுகளையும் பெற்றுவிடுகின்றன. சில காலமாற்றத்தில் செல்வாக்கிழந்து அழிந்தும் விடுகின்றன.

ஹலால்-ஹராம் ஏற்பாடுகளில் சில தற்காலிக ஏற்பாடுகளும் காணப்பட்டுள்ளதை இஸ்லாத்தின் அதிகார பிரதிகளில் காணமுடியும். யூத, கிறிஸ்தவ சமூகங்களுக்கு ஹராம்-ஹலால் தொடர்பில் அளிக்கப்பட்ட தற்காலிக ஏற்பாடுகளை (ஆலஇம்ரான் 50) குறிப்பிடுகின்றது. இது நபிகளுக்கு முந்திய யூத, கிறிஸ்தவ சகாப்தத்தில் நடைபெற்றுள்ளது. நபிகள் தோன்றிய ஆறாம் நூற்றாண்டு உலக பட்டுப்பாதையின் வளர்ச்சியும் தொடர்பாடல் பெருக்கமும் பண்பாடுகளுக்கிடையில் நெருக்கமும் அதிகரித்த காலப்பிரிவாகும். அதனால் முன்னைய பண்பாடுகளில் தோன்றிய ஹராம்-ஹலால் வழமைகளின் அறுதித் தரிசனங்களை முன்வைக்கக்கூடிய வல்லமையும் திறனும் அவருக்கு ஏற்படுகின்றது.

எந்தவொரு மதத்திற்கும் பண்பாட்டிற்கும் ஒரு உலக தரிசனமும் நோக்குமுறையும் காணப்படுகின்றது. அந்த உலக நோக்குமுறைக்கேற்பவே அதன் ஹராம்-ஹலால் வழமைகளும் தீர்மானிக்கப்படுகின்றன. உதாரணமாக, ஆசியப் பிராந்தியத்தில் தோன்றிய சமணம், பௌத்தம் போன்ற மதங்கள் காம, குரோத அழுக்காறுகளை ஒழிப்பதன் ஊடாகவும் புலனொறுக்கம், புலனடக்கம் போன்றவற்றைக் கைக்கொள்வதன் மூலமும் ஆன்மீக, பரிசுத்த நிலையை அடையமுடியுமென நம்புகின்றனர். அல்லது அறம் சார்ந்து உழைப்பதற்கான முன் நிபந்தனைகளாக இவற்றைப் பரிந்துரை செய்கின்றன. இந்த துறவற கருத்தியல்கள் மத்திய கிழக்குச் சமயங்களை பாதித்துள்ளதாகவும் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவதை அவதானிக்கலாம். கிறிஸ்தவத்தில் இத்தாக்கத்தைத் தெளிவாக

அவதானிக்க முடியும். ஆனால் நபிகள் அறிமுகப்படுத்திய இஸ்லாமிய உலக நோக்கு விரிவும் ஆழமும் கொண்டது. முழுப் பிரபஞ்சமும் மனிதனுக்கு வசப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக அவ்வுலக நோக்கு குறிப்பிடுகின்றது. உலகத்தை வளப்படுத்தும் பணியினூடாகவே முஸ்லிமின் மறுமைப் பயனும் அமைகின்றது.

நபிகள் மூலமாக அருளப்படுகின்ற அல்குர்அனில் முன்னைய சமூகங்களின் ஹராம், ஹலால் தொடர்பான வழமைகள் பரிமாறப்படுவதோடு புதிய ஏற்பாடுகளும் பரிந்துரைகளும் காணப்படுவதையும் அவதானிக்க முடியும். அதிகாரப் பிரதிகளான அல்குர்ஆன், நபிகளின் வாழ்வியல் போக அவற்றிலிருந்து உருவாக்கி அளிக்கப்பட்ட சட்டவாக்க முறைமைகளும் இந்த ஹராம்-ஹலால் உருவாக்கத்திற்கு பங்காற்றியுள்ளன. இதில் 'உருப்' என்னும் சமூக வழமை, இஸ்லாமிய சட்டவாக்கத்தில் பெரும் வகிபாகத்தைப் பெற்றுள்ளது. நாடுகள், சமூகங்கள், அவற்றின் சூழல் சார்ந்த வாழ்க்கை முறைகள், மனிதர்களின் விருப்புவெறுப்புக்கள் போன்ற பலவிடயங்கள் இச்சட்டவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

மத்திய கிழக்குச் சமூகங்களின் பலதாரமணம் நபிகள் யுகத்திற்கு முன்பிருந்தே காணப்படும் சமூக வழமையாகும். அவ்வழமைக்கேற்ப அவர்களின் உணவுப் பழக்கவழக்கங்களும் ஹராம்-ஹலால் தொடர்பான வழமைகளும் அமைந்திருப்பதை இதில் அவதானிக்க முடியும். பலதார மணம் புரியும் நிலையில் அச்சமூகத்தில் உடல் ஆரோக்கியத்தை அதற்கேற்ப பலப்படுத்திக் கொள்வதற்கான உணவுப் பழக்கவழங்களே அங்கு இன்றும் காணப்படுவதை அவதானிக்கலாம். இறைச்சி, பால் போன்ற உணவுப் பொருட்களுக்கு மத்திய கிழக்குச் சமூகங்களில் பெரியதொரு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. எனவே இத்தகைய பண்பாட்டுப் பின்புலத்திலிருந்து உருவாகிவரும் கருத்தியலுக்கும் ஆசிய சமூகங்களில் பொதுவாக இழையோடிக் காணப்படும் ஆன்மவாதத்திற்கும் இடையே நடைபெறும் ஒரு மோதுகையாகவும் அண்மையில் இலங்கையில் தோன்றிய ஹராம்-ஹலால் தொடர்பான நெருக்கடிகளை நாம் பார்க்க முடியும்.

அதேநேரம் நபிகள் எதிர்காலவியல் குறித்து தெரிவித்துள்ள கருத்துக்களில் நகரமயமாக்கல், நுகர்வியம், தொழில்நுட்பம் சார்ந்த விடயங்கள் இன்றைய சூழலில் மிகநுணுக்கமாக பரிசீலிக்க வேண்டிய விடயங்களாகும். இன்றைய உலக முதலாளித்துவ சக்திகள் நுகர்வியத்தையே ஊக்குவித்து வருகின்றன. உற்பத்தியும் அதனூடாகக்

கிடைக்கும் இலாபங்களும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தையே சென்றடைகின்றன. உடல் உழைப்பின் அளவு வெகுவாகக் குறைக்கப்பட்டு மூளை உழைப்பு சார்ந்த சேவை, பரிவர்த்தனை முறைகளே இன்று எங்கும் பரவி வருகின்றது. நகரமயமாக்கல், காலனித்துவ ஆட்சிக்குப் பின் உலகின் பல குடியேற்ற நாடுகளில் இன்று பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளது. குடியிருப்புக்கள், ஐதாக இருக்கும் போதே உற்பத்தி, விவசாயம் போன்ற பணிகளை ஆற்ற முடியும். ஆனால், நகரமயமாக்கல் சூழலில் குடியிருப்புக்கள் மேலும் மேலும் செறிவாக்கப்படுவதன் மூலம் அதற்கேற்ற நுகர்வுமுறையே தொற்றிக்கொள்ள ஆரம்பிக்கும். நகரமயமாக்கலில் குவிக்கப்படுவது கட்டிடம் போன்ற பௌதீக அம்சங்கள் மாத்திரம் அல்ல. மைய நிருவாகம், அதிகாரக் குவிப்புக்களும் அங்கு காணப்படுகின்றன. பல இடங்களில் சிதறிக்காணப்படும் உதிரிகள் ஓரிடத்தில் குவிக்கப்படும் போது புவியின் பௌதீகச் சமநிலை குலைவதைப் போல சமூகவியல் நெருக்கடிகளும் நகரமயமாக்கலில் பக்கவிளைவுகளாகும்.

இன்று உலக முதலாளியம் அறிமுகப்படுத்தியிருக்கும் நுகர்வியம் உடல்போன்ற பௌதீக அம்சத்தை மட்டுமல்ல, மனித மனத்திலும் மிகுந்த நெருக்கடிகளையும் சவால்களையும் தோற்றுவித்துள்ளது. விளம்பரப்படுத்தப்படும் அத்தனை நுகர்வுப் பொருட்களையும் வசதியுள்ளவனே நுகர முடியும். வசதியற்றவனுக்கு அதை அடையும் வரை அதுவொரு சவாலாக மாறிவிடுகிறது. இன்று ஏற்பட்டுள்ள மன அழுத்தங்கள், மன நெருக்கீடுகளுக்கு இதுவே காரணமாகும். மற்றொரு புறத்தில் இன்றைய நுகர்வியத்தில் வழங்கப்படும் பொருட்கள் ரசாயனக் கலப்புக்களும் இனம் கடந்த, மரபணு மாற்றம் பெற்ற தயாரிப்புக்களுமாக மனிதனையும் அவனது சுற்றுச் சூழலையும் காலவோட்டத்தில் மாசுபடுத்தி அழிக்கக்கூடியவனவாக மாறியுள்ளன. உதாரணமாக சீனா, அண்மையில் பழச்சுவை கொண்ட டொபிகளை ஏற்றுமதி செய்து வருகின்றது. இது உண்மையில் குறிப்பிட்ட பழங்களிலிருந்து தயாரிக்கப்பட்டவை அல்ல. அப்பழத்தின் மனத்தை தருவிக்கக்கூடிய ரசாயனக் கலவை மூலமே உருவாக்கப்படுகின்றன. இப்படி சந்தையில், உணவகங்களில் பொதி செய்யப்பட்டுள்ள ஏராளமான நுகர்வுப் பொருட்களின் கலப்படங்களை பட்டியலிட முடியும். எல்லோருக்கும் நாட்டுக் கோழிமுட்டை கொடுக்க முடியாது என்பதால் பண்ணையில் தயாரிக்கப்படும் முட்டைகளே இன்றைய முதலாளித்துவ சந்தைகளை ஆக்கிரமித்துள்ளன. சுற்றுச்சூழலுக்குக் கேடுவிளைவித்து அடுத்த சந்ததிக்கு இந்த சூழலையும் வாழ்வியலையும் இல்லாமல் செய்யும் போக்கிலேயே இன்றைய நுகர்வியம் சென்று கொண்டிருக்கிறது. எனவே,

எந்தவொரு நல்ல கொள்கையும், வாழ்வியல் கோட்பாடும் அல்லது மதமும் பண்பாடும் கட்டுக்கடங்காத வெறிகொண்டலையும் இந்நுகர்வியத்தை எதிர்கொள்ளாமல் ஒதுங்கியிருக்கமாட்டாது.

இன்றைய நுகர்வியத்தின் பின்னாலிருக்கும் முதலாளித்துவ பொருளாதார சக்திகளை எதிர்த்து நின்று தற்காத்துக் கொள்ள வேண்டிய நிலைக்கு இன்றைய சமூகங்கள் தள்ளப்பட்டுள்ளன. எனவே இன்றைய முதலாளியம் உற்பத்தி செய்து தருகின்ற நுகர்வுப் பொருட்களுக்கு இஸ்லாமிய லேபல் ஒட்டி அவற்றை இஸ்லாமியப் பண்டமாக, ஹலாலானதாக அறிமுகப்படுத்துவது அல்ல இன்று நமக்குத் தேவைப்படும் போராட்டமாகும். மாறாக உள்ளூர் உற்பத்தி, உள்ளூர் நுகர்வு, உள்ளூர் தொழில்நுட்பம் என்பவற்றை ஊக்குவிப்பதற்கான உபாயங்களை நோக்கி நகர்வதே நம்மனைவர் முன்னுள்ள பணியாகும். கொக்கா கோலாவை மக்காவிலுள்ள 'ஸம்ஸம்' கிணற்றின் பெயராக மாற்றுவதும் அமெரிக்க அழகுசாதனப் பொருட்களுக்கு இஸ்லாத்தின் ஹராம்-ஹலால் கண்ணோட்டத்தை வழங்குவதும் மேலும் மேலும் முதலாளித்துவ சக்திகளுக்கு இடமளித்து எமது பௌதீகச் சூழலையும் ஆரோக்கியத்தையும் அழிக்கும் செயலாகவே அமைய முடியும். நபிகள் நகரமயமாக்கலை எதிர்த்துள்ளார். கட்டுக்கடங்காத நுகர்வியத்திற்கெதிராக குரல் கொடுத்துள்ளார். தேவைக்கேற்ற, சூழலுக்கேற்ற தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சுய உற்பத்தியிலும் தன்னிறைவு பொருளாதாரத்திற்கும் வழிகாட்டியுள்ளார். உபரிகளை மற்றமைகளின் மீது திணித்து ஒரு வர்க்கம் மட்டும் கொழுப்பதற்கான பொருளாதாரத் திட்டங்களை அவர் வழிமொழியவில்லை.

நபிகள் அன்றைய பொருளாதாரக் கட்டமைப்பில் மிகப்பெரும் சுரண்டலாகக் கணிக்கப்பட்ட வட்டியையும் அதனோடு தொடர்புடைய வணிக ஒழுங்குகளுக்கும் மாற்றான பொருளாதார சிந்தனையை முன்வைத்துப் போராடியுள்ளார். மத்திய கிழக்கைச் சுற்றியிருந்த ரோம, பாரசீக நாடுகளின் பொருளாதாரக் கொள்கையினால் மேலும் மேலும் வறுமைக்குள்ளாக்கப்பட்ட நாடோடி அறபு பழங்குடிச் சமூகங்களின் அபிவிருத்திக்கான வாழ்வாதாரத் திட்டங்களை சமய, பண்பாட்டு நெறிமுறைகளுக்கூடாகவும் கரவான் வர்த்தக முறைகளுக்கூடாகவும் அவர் முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் வஹாபிய நோக்குமுறை எல்லாவற்றையும் நேர்பொருளிலேயே எடுத்துக் கொள்வதால் ஹராம்-ஹலால் விடயத்திலும் அத்தகைய எழுந்தமான நேர்கோட்டுப் பார்வையே காணப்படுகின்றது. அன்றிருந்த

யூத வட்டி முறை பொருளாதாரக் கட்டமைப்பினுள் அறேபியப் பழங்குடிகள் சிக்குண்டு திண்டாடிக் கொண்டிருந்த வேளையில் அவற்றிலிருந்து விடுபடுவதற்கான மாற்று பொருளாதாரத் திட்டங்களை நபிகள் முன்வைத்தார். மதீனா சந்தையை கையகப்படுத்துவதே அவரது அப்போதைய முதல்தர நோக்கமாக இருந்தது. ஒரு குறிப்பிட்ட கால சமூகப் பொருளாதார நெருக்கடிச் சூழலில் முன்வைக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கை முற்றிலும் வேறுபட்ட பல்வேறு நிலம் சார்ந்த வாழ்க்கை முறைகளைக் கொண்ட தென்னாசிய சமூகங்களின் பொருளாதார முறைமைகளிலிருந்து வேறுபட்டவை என்பதும் இங்கு நோக்கத்தக்கது. எனவே, ஹராம்-ஹலால் பற்றிய கண்ணோட்டம் ஒரு சில விடயங்களோடு மாத்திரம் குறுக்கிவிடக்கூடியதோ, ஒரு சில ஹராமாக்கப்பட்ட உள்ளீடுகளைக் கொண்ட பொருட்களை மட்டும் தவிர்ப்பதாக மட்டுமோ அமைந்துவிட முடியாது. இன்றைய சந்தைப் பொருளாதாரத்தில் முதலீடு, உற்பத்தி, வினியோகம், நுகர்வுச்சக்திகளின் அரசியலையும் அதன் பொருளாதார இலக்குகளையும் கூர்ந்து அவதானித்து புரிந்து கொள்வதும் அவசியமாகும். அதுதான் ஹராம்-ஹலால் பற்றிய ஆழமான பார்வையாகும். அல்குர்ஆன், ஹராம், ஹலால் என்ற பதங்களை பிரயோகிக்கும் இடங்களிலெல்லாம் உணவுப் பொருட்களை மட்டும் குறிப்பிடவில்லை. வறுமை, குழந்தைப் படுகொலை, மனித உரிமை மீறல், பொருளாதார ஒப்பந்தங்களிலுள்ள திணிப்புகள், உடல் நலக்கேடுகளை விளைவிக்கும் உற்பத்திகள் என்று பன்முகப் பாங்கில் ஒரு முழுமைத்துவமான ஹலால்-ஹராம் கண்ணோட்டத்தையே முன்வைத்துள்ளது. (அன்ஆம் 153)

இன்றைய நுகர்வில் மருத்துவம், மருந்துப் பொருட்களின் நுகர்வு, அதன் பக்கவிளைவுகள் குறித்த பல்வேறு ஆய்வுகளும் விழிப்புணர்வு செயல்வாதங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 1990 களுக்குப் பின் தமிழ்ச் சூழலிலும் மருந்துக்காலனியம் தொடர்பான வாதவிவாதங்கள் பேசுபொருளாக மாறியிருந்த போதிலும் நமது ஆலிம்கள் மத்தியில் அத்தகைய விடயங்கள் இன்னும் அக்கறைக்குரியதாக மாறவில்லை என்பதே சோகமானது. உதாரணமாக வீட்டிலுள்ள எலித் தொல்லையை இல்லாமலாக்குவதற்கு மூன்று பனடோலை சோற்றுடன் பிசைந்து வைத்தால் எலிகளை அழித்துவிடலாம் என்பதே இன்றைய அனுபவமாகும். கை, முகம் கழுவுகின்ற பேசின் அடைப்பை நீக்க ஒரு கொக்கோ கோலா போத்தல் பானத்தை ஊற்றினால் அடைப்பு நீங்கிவிடுமென குடும்பஸ்தர்கள் கூறுவதைக் கேட்கிறோம். இப்படி இன்றைய நுகர்வுப் பொருட்களின் அல்லது மருந்துப் பொருட்களின் பக்கவிளைவுகள் குறித்த பேரபாயங்கள்

உணரப்பட்டுள்ள சூழலில் ஒரு குறிப்பிட்ட கொழுப்பை மாத்திரம் மையப்படுத்தி அதற்குச்சான்றிதழ் வழங்கிக் கொண்டிருப்பது மட்டும் சரியானதா என்பது சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

# ஹலால்: எதிர்வினைகள்

***அண்மைக்காலமாக முஸ்லிம்களின் வழிபாட்டுத்தளங்கள், வர்த்தக நிறுவனங்கள், தனிநபர், இஸ்லாமிய குறியீடுகள் மீது பௌத்த தேசியவாத அமைப்புகள் குறிவைத்துத் தாக்குவதை எப்படி எதிர்கொள்ள முடியும்?***

*பௌத்தம் ஓர் அரசியலாக எழுச்சி பெற ஆரம்பித்த காலத்திலிருந்து இந்தச் சவால்களை முஸ்லிம்கள் எதிர்கொண்டு வருவதே வரலாறாக இருக்கின்றது. 2015 ஆகும் போது முஸ்லிம்களுக்கு எதிரான அந்த வன்முறைச் சம்பவத்திற்கு நூற்றாண்டு முடிவடையப் போகிறது. ஆனால் அண்மைக்கால நெருக்கடிகளை உள்ளிருந்து பார்க்கும் போது சில விடயங்களை முஸ்லிம்கள் கவனத்தில் எடுக்கவேண்டியுமுள்ளது. ஆரம்ப கால வழிபாட்டுத்தளங்கள் குறைவாகவும் தேவைக்கேற்ற, பொருத்தமான அமைவிடங்களையும் பல்வேறு சமூகக் கலாசார விடயங்கள் நடைபெறும் இடமாகவும் அயல் சமூகங்கள் ஊடாடும் களமாகவும் இருந்து வந்துள்ளன. பள்ளி என்பதே சமண மரபோடு சம்பந்தப்பட்டது. அதற்கு சமண மரபில் மதிப்பும் மரியாதையும் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் சமாதிகளையும் தர்ஹாக்களையும் உடைத்து நொறுக்கலாம் என்ற முன்மாதிரியை சமணர்களுக்கு அல்லது இன்றைய பௌத்தர்களுக்குக் காட்டிக்கொடுத்ததும் இந்த வஹாபியமே. அவ்வாறே வஹாபியப் பணத்தில் அண்மையில் திடீர்திடீரென பள்ளிகள் தோன்றி முஸ்லிம் சமூகத்திற்குள்ளே நிலவிய பாரம்பரிய கட்டுக்கோப்பையும் சிதைத்து முஸ்லிம் நாடுகளில்கூட கிடைக்காத சில சுதந்திரங்களை இந்நாட்டு முஸ்லிம்கள் அனுபவித்துவரும் நிலையிலும் அவற்றை துஷ்பிரயோகம் பண்ணக்கூடிய நிலையும் ஏற்பட்டு வருகின்றது. உதாரணமாக ஒலிபெருக்கிப் பாவனை தொடர்பான அத்துமீறல் பொலிஸ் நிலையம் வரைக்கும் சென்று சட்டப்பிரச்சினையாக மாற்றியதும் முஸ்லிம்களே. அமைதியாக, எளிமையாக நிறைவேற்றப்பட்ட ஆன்மீகச் செயற்பாடுகள் அயலவர்களின் கண்களை, காதுகளை உறுத்துமளவுக்கு, தூக்கத்தைக் கெடுக்குமளவுக்கு பகட்டான ஆன்மீகமாக மாற்றியதும் எமது தரப்பிலிருக்கின்ற தவறுகளாகும்.*

அடுத்து குறிவைக்கப்படும் இலக்கு முஸ்லிம்களின் பொருளாதாரமாகும். இஸ்லாம் கூறும் பொருளாதாரச் சிந்தனையின் படி மனித சமூகத்திற்கு சேவை செய்வதே ஒரு முஸ்லிம் வர்த்தகரின் முதல்தர இலட்சியமாகும். இதன் கருத்து லாபம் உழைக்கக் கூடாது என்பது அல்ல. லாபம் உழைப்பதே முதல்தர குறிக்கோளாக மாறிவிடக்கூடாது என்பதுதான். சேவை என்ற இலட்சியத்தோடு அல்லது ஒரு இறைபணியைச் செய்கிறேன் என்ற எண்ணத்தோடு அக்காரியத்தில் இறங்கும் போது இறைவனின் அருளும் இருக்கும். ஆனால் எந்தப் பிராந்தியங்களில் நாம் வர்த்தக நிலையங்களை அமைத்திருக்கின்றோமோ அந்தச் சமூகத்தில் சமூக சேவைகளை, வாழ்வாதாரத் திட்டங்களை தேசிய அளவில் உதாரணம் காட்டக்கூடிய வகையில் செய்திருக்கிறோமா என்பது சந்தேகமே.

அவ்வாறே முஸ்லிம் சமூகக் குறியீடுகளும் நிந்திக்கப்பட்டு வருகின்றன. உலகில் எல்லா சமூகங்களுக்கும் குறியீடுகள் இருக்கின்றன. அக்குறியீடுகள் அச்சமூகங்களுக்கு அடையாளத்தைக் கொடுக்கும் அதேவேளை அவற்றை பரப்புரை செய்யும் ஊடகமாகவும் இருக்கின்றன. ஆனால் எமது மத்ரஸா பாரம்பரியத்தில் குறியீடுகளைப் பற்றிய அறிவு எப்படிப் போனாலும் சமூகவியல் கற்கை நெறிகளே இன்னும் பாடவிதானத்தில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. கிழக்கு முஸ்லிம்கள் அவை தமிழர்களின் பண்பாடு என்று புறமொதுக்கி, முஸ்லிம் குடிவழிச் சின்னங்களையும் குறியீடுகளையும் அழித்துவிட்டார்கள். ஆரம்பகால முஸ்லிம்கள் அரேபிய இஸ்லாமிய பண்பாட்டை ஏற்கும் போது உள்ளூர்ப் பண்பாடுகளின் அசைவியக்கங்களை புரிந்து கொண்ட நிலையிலேயே அதற்கு இணையான நெருடல் இல்லாத சமூகக் குறியீடுகளை உருவாக்கிக் கொண்டனர். நகரா, பிறை, 786 போன்றன இந்தப் பின்னணியிலிருந்து உருவானவையே. இவை இன்றைய குறியீடுகளின் பெருக்கத்திற்கு முன்னால் தாக்குப்பிடிக்க முடியாதவை என்பதில் சந்தேகமில்லை. அதேபோன்று இஸ்லாத்தின் மூலப்பிரதிகள், உரைகள் போன்றவற்றை புரிந்து கொள்வதற்கும் வழிபாடுகளை நிறைவேற்றுவதற்கும் அரபு மொழிப் பயில்வு என்பது அவசியம்தான். ஆனால் அரபு மொழி பெயர்ப் பலகைகளையும் போட்டு அயல் சமூகங்களை அதிர்ச்சிக்குள்ளாக்குவதும் நடைபெறுகிறது. அரேபிய சூழலுக்கேற்ற ஆடை, அலங்கார முறைகள் போன்றவற்றை அப்படியே பிரதிபண்ணுவது ஆசியச் சூழலுக்கு ஒத்திசைவாக அமைய மாட்டாது.

சிறுபான்மையாக அதேநேரம் நிரபராதியாக இருக்கும் இலங்கை

முஸ்லிம்களை ஒரு வன்முறைச் சமூகமாக உருமாற்றுவதற்கான முயற்சிகளும் சினமூட்டல்களும் நடந்தேறி வருகின்றன. முஸ்லிம் சமூகத்தை மேலும் மேலும் தனிமைப்படுத்தி அவர்களை வன்முறையாளர்களாக கட்டமைப்பதற்கு ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் அமைக்கப்பட்டிருப்பது போன்றே அண்மைய நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. எனவே வன்முறைக்கு வன்முறையையே பதிலடியாகக் கொடுக்காமல் சட்டம், சாத்வீக அரசியல் போராட்டங்கள் மூலமும் அயல் சமூகங்களின் ஆதரவுக்கரங்களைப் பலப்படுத்துவதன் மூலமும் இச்சவால்களை எதிர்கொள்ளும் நிலைக்கு முன்வர வேண்டும்.

***பொது பல சேனா எதிர்க்கிறது என்பதற்காக உலமா சபை ஹலால் சான்றிதழ் வழங்கும் நடைமுறையை கைவிட்டுவிடலாமா?***

இல்லை. கைவிட்டுவிட முடியாது. கைவிடவும் கூடாது. ஹலால் சான்றிதழ் வழங்கும் முகாமைத்துவப் பொறிமுறையில் தேவையான மாற்றங்கள் கொண்டுவரப்படலாமே ஒழிய ஹலால் உரிமையை முஸ்லிம்கள் விட்டுக் கொடுக்கும் கையறு நிலைக்கு கொண்டு செல்ல உலமா சபையின் அணுகுமுறை அமைந்துவிடக் கூடாது. ஏனெனில் ஹலால் முஸ்லிம்களின் உறுதியான, நீண்ட நெடுங்காலமாக கடைப்பிடிக்கப்படுகின்ற கலாசார உரிமையாகும். சான்றிதழ் வழங்குகின்ற நடைமுறையும் அது சார்ந்த நிருவாகப் பொறிமுறையும்தான் தற்போது சர்ச்சைக்குரியவையாக மாறியிருக்கின்றன.

***ஏற்றுமதிப் பொருட்களுக்கு மாத்திரம் ஹலால் சான்றிதழ் வழங்கும் நடைமுறையை உலமா சபை கைக்கொண்டால் முஸ்லிம்கள் எப்படி அதனை எதிர்கொள்வது?***

ஹலால் உரிமையை விட்டுக் கொடுப்பதற்கு முஸ்லிம்களின் கூட்டு மனமும் நம்பிக்கையும் இடமளிக்காது என நினைக்கின்றேன். முஸ்லிம்களின் அந்நீண்டகால பண்பாட்டுப் பேணுகைக்கு ஒரு நிருவாகப் பொறிமுறையைத்தான் உலமா சபை கொண்டுவந்துள்ளது. அப்பொறிமுறையில்தான் மாற்றங்களை கொண்டுவர வேண்டுமே தவிர அதை தாரைவார்ப்பது அல்ல. முஸ்லிம்களின் ஹலால் உரிமை மற்றவர்களின் பொருளாதார நலன்களுக்காக உருவாக்கப்பட்டதல்ல. அவ்வாறு விட்டுக் கொடுப்பது பெருமுதலாளிகளின் நலன்களுக்குப் பயன்படுவதோடு மேலும் மேலும் முஸ்லிம்கள் நலிவடைவதற்கே வழிவகுக்கும். இது பெருந்தேசியவாத சக்திகளின் சதிவலைகளைச் சரிவர

புரிந்துகொள்ளாத முஸ்லிம் புலமை வறுமை மற்றும் அரசியல் வலுவின்மையையே வெளிப்படுத்துகின்றது. அவ்வாறு மற்றவர்களின் பொருளாதாரத்திற்கு ஹலால் சான்றிதழ் பெறவேண்டுமானால் சர்வதேச மட்டத்தில் ஹலால் சான்றிதழ் வழங்குவதற்குப் பல்வேறு நிறுவனங்கள் காத்திருக்கின்றன. உலக நாடுகளில் வாழும் முஸ்லிம் வாடிக்கையாளர்களுக்காக இலங்கை உலமா சபை ஹலால் சான்றிதழ் வழங்குவதும் அதே ஹலால் உரிமை உள்ளூர் முஸ்லிம்களுக்கு மறுக்கப்படுவதும் நகைப்புக்கிடமானதல்லவா. இவ்வாறு பல்வேறு இனவாத மற்றும் மறைமுக அரசியல் சக்திகள் உலமா சபையை பலவீனப்படுத்தி கைப்பாவையாக பயன்படுத்த முற்படும் நெருக்கடியான தருணங்களில் ஹலால் நிறுவாகப் பொறிமுறையைக் கைவிட்டு சிவில் சமூக போராட்டமாக அல்லது சிவில் சமூக முன்னெடுப்பாக ஹலால் உரிமைக்காக கோரிக்கை விடுப்பதுதான் நீண்டகாலத்தில் பயனளிக்குமென நம்புகின்றேன்.

இன்று உலக அளவில் மனித உரிமைக் குழுக்களுக்கு மத்தியில் கலாச்சார உரிமைகளுக்காக போராடும் குழுக்களும் தோன்றியுள்ளன. உள்ளூர்ப் பண்பாடுகள், மதச்சடங்குகள், பலிகொடுக்கும் சடங்குகள் போன்றவற்றை அழித்தொழிக்கும் உலகமயமாக்கல், பெருநிறுவனங்களின் செயற்பாடுகளுக்கெதிராக இந்த கலாசார உரிமைக் குழுக்கள் போராடி வருகின்றன. இவர்களுடன் தொடர்புகளையும் ஊடாட்டத்தையும் வலுப்படுத்துவதனூடாக இதை முன்னெடுக்க முடியும். அந்த இடங்களில் வஹாபியத் தூய்மைவாதத்தை கைவிட வேண்டும். இந்த நாட்டில் பெருந்தேசியவாத சக்திகளின் சதித்திட்டங்களுக்கு மாறாக சிறு சமூகங்கள் மாற்று உபாயங்களைக் கையாண்டு எதிர்நிலையில் செயற்பட்டமைதான் கடந்தகால வரலாறாகும். பெரும்பான்மையின் நினைப்புக்கும் தப்புக்கணக்குக்கும் மாற்றாக சிறு சமூகங்கள் சிந்தித்து செயல்பட்டுள்ளன. வரலாற்றில் எத்தனையோ சிறு சமூகங்கள் எதிர்த்து நின்றுள்ளமையை அல்குர்ஆனே குறிப்பிட்டுள்ளது. எனவே உலமா சபை பின்வாங்கக் கூடாது. அது இலங்கை முஸ்லிம் சமூகத்தின் மிக முக்கியமான சிவில் சமூகக் கட்டமைப்பாகும். அது தற்செயலாகத் தோன்றிய நிறுவனமோ அமைப்போ அல்ல. அதாவது இலங்கை முஸ்லிம்கள் தம்முடைய சமய விவகாரங்களில் ஒரு சிந்தனைக் கட்டுக்கோப்பையும் மற்றப் பண்பாடுகளுடன் இணைந்தும் தனித்துவமாயும் வாழ்வதற்காக உருவாக்கிக் கொண்ட ஓர் அமைப்பாகும். இலங்கை முஸ்லிம்கள் தங்களை ஒரு சமூகமாக பொதுமனத்தில் உணர்ந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பே அது. ஆனால் அந்த சிவில் சமூகக் கட்டமைப்பு சில

உள்ளார்ந்த பலவீனங்களைக் கொண்டுள்ளது. அதனால்தான் அதற்குப் புறத்தே இருந்து வருகின்ற சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் திண்டாடுகின்றது. அந்த உள்ளார்ந்த பலவீனங்கள் களையப்படுமாக இருந்தால் உறுதியாக நின்று உழைக்க முடியும்.

அடுத்தது, இந்த ஹலால் சான்றிதழ் வழங்கும் விவகாரத்தோடு தொடர்புபடுகின்றது. ஹலால் சான்றிதழ் நடைமுறை கொழும்பு போன்ற நகர்ப்புறத்தில் வாழும் முஸ்லிம் மக்களே உணவகங்களில் பொதி செய்யப்பட்ட உணவு வகைகளை வாங்கி நுகர்கின்றனர். இவர்கள் மிகச்சிறிய தொகையினராவர். இத்தொகையினருக்கே இந்த ஹலால் சான்றிதழ் அதிக பயன்பாடுடையது. நகரமல்லாத குறிப்பாக வடக்குக்கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம்கள் இந்த நிமிடம் வரை 'ஃபிரஷ்' உணவுகளையே சாப்பிட்டு வருகின்றனர். இவர்கள் மத்தியில் கே.எப்.சி, மெக்டொனால்ட் போன்ற உணவுகங்கள் இன்னும் அறிமுகமாகவில்லை. எனவே இந்த ஹலால் விவகாரம் கிழக்கு முஸ்லிம்களிடம் எந்தவொரு எதிர்ப்பலையையும் ஏற்படுத்தியதாகவும் தெரியவில்லை. அவர்கள் நகர்ப்புற உணவுக் கலாசாரத்திற்குள் இன்னும் ஈர்க்கப்படவில்லை என்பது' முக்கியமானது. இதனால் இந்த ஹலால் விவகாரம் தொடர்பாக எல்லா முஸ்லிம்களினதும் பொது ஆதரவை திரட்டும் பணியில் உலமா சபையால் வெற்றிபெற முடியவில்லை.

இந்த ஹலால் நடைமுறையைவிட மிகப்பயங்கரமான நிகழ்வுகள் கிழக்கில் நடைபெற்று வருகின்றன. முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் சொந்தமான பாரம்பரியக் காணிகள் அபகரிக்கப்பட்டு வருகின்றன. கரையோர முஸ்லிம்களின் தொழில்சார்ந்த நிலங்கள், பல்தேசியக் கம்பனிகளுக்கும் சுற்றுலாத் துறை தொழிலதிபர்களுக்கும் விற்கப்படுகின்றன. இவைபற்றி முஸ்லிம் அரசியற் கட்சிகள் அலட்டிக் கொள்ளாததைப் போல உலமா சபையும் அலட்டிக் கொள்ளவில்லை. இவையும்கூட நீண்டகாலத்தில் ஹலால், ஹராம் தொடர்பான விடயங்கள் உருவாகுவதற்கு வழிவகுக்கவே செய்யும். தமிழர்களுக்கு அநீதி நடக்கும் போது முஸ்லிம்கள் குரல் கொடுப்பதில்லை. தம்மைப் போன்ற மலையக மக்களுக்காகவும் அவர்கள் குரல் கொடுப்பதுமில்லை. சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் இலங்கை மக்களுக்காக பணியாற்றும் பொதுவானவர்கள் பாதிக்கப்படும் போதும் குரல்கொடுப்பதில்லை. எனவே முஸ்லிம்களுக்கு அநீதி நடக்கும் போது அடுத்தவர்கள் குரல்கொடுக்க வேண்டும் என எதிர்பார்ப்பது எப்படி சாத்தியமாகும். சிறு சமூகங்கள் இணைந்துவிடாமல் பிரித்துவைப்பதில் ஆளும் வர்க்கங்களுக்கும் பங்கிருக்கிறது.

அவ்வாறே ஹலால் கருத்தியல் தற்காலத்திற்கேற்ற மொழியில் வைத்து உலமா சபை உரையாடவுமில்லை. அதற்கான பொதுப் பரப்புரைகளை பெருந்தேசிய சமூகத்தவரிடம் கொண்டு செல்லவுமில்லை. எனவே கருத்தியல் சார்ந்த பலவீனமும் அதற்கான பரப்புரை சார்ந்த ஊடக முன்னெடுப்பு பலவீனங்களும் அதனிடம் காணப்படுகின்றன. இவை போன்ற உள்ளார்ந்த பலவீனங்களால்தான் அது பின்வாங்க நேரிடுகின்றது. அஹ்மத் முஹமத் ராஷித் என்ற சிந்தனையாளர் குறிப்பிடும் உதாரணத்தைப் பாருங்கள், ''மலையில் இருந்து ஓடிவரும் நதியைப் பாருங்கள். அதற்கு குறுக்கே ஒரு தடை வரும்போது என்ன செய்கிறது? சற்று தாமதித்து நின்றபடி நீரைச் சேர்த்துச் சேர்த்து இறுதியில் அந்தத் தடைக்கு மேலாக பாய்ந்தோடுகிறதல்லவா? அது போன்றதுதான் ஒரு சிவில் சமூக இயக்கமுமாகும். சமூக உரிமைப் போராட்டங்களில் பின்வாங்கக் கூடாது. பொதுவான ஆதரவுக் கரங்களைத் திரட்டிக் கொள்ள வேண்டும். கடந்தகாலத் தவறுகளை திருத்திக் கொண்டு முன்னகர்வதுதான் பொருத்தமானது.''

**ஹலால்-ஹராம் மற்றவிடயங்களிலும் முஸ்லிம்களால் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்ற வாதம் முன்வைக்கப்படுகிறதே?**

ஹலால்-ஹராம் என்பது ஒரு முஸ்லிமின் தனிப்பட்ட வாழ்வு, குடும்ப வாழ்வு, தொழில்சார் வாழ்வு, சமூகப் பொதுவாழ்வு என்ற எல்லாத் தளங்களிலும் இயன்றவரை பின்பற்றப் படவேண்டியதாகும். உணவுக்காக பிராணிகளை அறுப்பதிலும் சில உணவுப் பொருட்களில் மட்டும் ஹராம்-ஹலால் பேண வேண்டும் என்றோ, மற்ற விடயங்களில் எப்படியும் நடக்கலாம் என்றோ இஸ்லாம் போதிக்கவில்லை. முஸ்லிம்கள் என்போர் குற்றமே அற்ற அமரத்துவ சமூகமும் அல்ல. ஆனால் இன்றைய முஸ்லிம் சமூகத்தில் வாழ்க்கையை ஒட்டுமொத்தமாக இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் பார்க்கும் பார்வை கிடையாது. வாழ்க்கை கூறுபோடப்பட்டுள்ள நிலையே காணப்படுகிறது. உலக வாழ்வு வேறு, ஆன்மீக வாழ்வு வேறு என்ற கண்ணோட்டமே காணப்படுகின்றது. இஸ்லாமிய வழிபாடுகள் சில உணவுப் பொருட்கள் போன்றவற்றில் இஸ்லாமிய நடைமுறைகளை மீறாமல் கடைப்பிடிக்கும் முஸ்லிம் கொடுக்கல் வாங்கல், தொழில்துறைகள், வணிக ஒப்பந்தங்கள், உரிமைகள் கடமைகள் போன்ற அடுத்த மனிதரோடு தொடர்புடைய விடயங்களில் பலவீனமாக இருப்பது உண்மைதான். ஆனால் அடுத்த மனிதர்களின் அல்லது மற்றமைகளின் உரிமைகள், கடமைகள் போன்றவற்றில் தவறுகளை செய்வதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது. ஆன்மீகம் சார்ந்த வழிபாடுகள் போன்றவற்றில் தவறுகள்

நிகழ்ந்தால் இறை மன்னிப்புக் கிட்டும் என்றே இஸ்லாமிய நம்பிக்கை உள்ளது. ஆனால் மற்றமைகளின் உரிமைகள், கடமைகளில் தவறுகள், அத்துமீறல்கள் நடந்தால் அந்த மற்றமைகளின் மன்னிப்பு முன்நிபந்தனையாக உள்ளது. அதற்குப் பின்னரே இறைவனின் மன்னிப்புக் கிட்டும் என வருகிறது.

**ஹலால் ஒரு ஆரோக்கிய கருத்தாக்கம் என்ற வகையில் பிற சமூகங்களுக்கும் ஏற்றவாறு உலமா சபை அதனை முன்கொண்டு சென்றிருக்கிறதா?**

அவ்வாறு ஹலால் கருத்தியல் பொதுவான தளத்தில் பரப்புரை செய்யப்படவில்லை என்பதுதான் பலரது அவதானமாகும். குறிப்பாக ஹலால் நடைமுறையை கருத்து விளக்க படங்களோடு குறைந்தபட்ச ஒரு கையேட்டையோ அதை இந்த நாட்டில் பெருந்தேசிய இனங்களின் மொழிகளான சிங்களத்திலோ தமிழிலோ அல்லது பொது மொழியாக விளங்கும் ஆங்கிலத்திலோ எந்தவொரு தெளிவான வெளியீடுகளும் இதுவரை வந்ததாகத் தெரியவில்லை. இந்த ஹலால் விவகாரம் நெருக்கடிக்குள்ளாகிய சந்தர்ப்பங்களில் மட்டும் உலமா சபையின் பொறுப்பாளர்கள் விட்ட அறிக்கைகளும் ஒரு வழிகாட்டி ஏடும் அல்லது அவர்கள் வழங்கிய நேர்காணல்களிலும்தான் இது தொடர்பான சில அவதானக் குறிப்புக்களை காணக்கூடியதாக உள்ளது. மற்றப்படி கொழும்பு போன்ற நகர்ப்புறங்களில் வெள்ளிக்கிழமைகளில் ஜும்ஆ தினங்களில் முஸ்லிம்களுக்கு மாத்திரம் இந்த விளக்கங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்கான அடிப்படைக் காரணம் உலமா சபையின் தற்போதைய தலைமையும் அதன் பரிவாரங்களும் எழுத்தையும் ஊடகம் சார்ந்த பரப்புப் பணிகளையும் உடனடியாக உள்வாங்கி ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு கொண்டவர்கள் அல்ல.

**முஸ்லிம்கள் செய்துவந்த சிறுசிறு வணிகங்களை அழித்து பெரும் கோர்பரேட் நிறுவனங்கள் உருவாவதற்கு 'ஹலால் சான்றிதழ்' நடைமுறை துணைநிற்பதாக கூறப்படுகிறதே?**

ஆமாம் அது உண்மைதான். பொருளாதார ரீதியாகப் பார்க்கும் போது சிறு உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். உதாரணமாக ஒவ்வொரு ஊரிலும் அந்த ஊரின் தேவைக்கேற்ப சிறு சிறு முஸ்லிம் உற்பத்தியாளர்கள் அவ்வூரின் தேவையை பூர்த்தி செய்து கொண்டிருக்கும் நேரத்தில் ஹலால் சான்றிதழை வழங்குகின்ற போது பெரும் முதலீடுகளுடன் உருவாகியிருக்கும் அங்காடிகளுக்கு ஹலால் சான்றிதழ்

மேலும் உந்து சக்தியாகவே அமைந்து விடுகின்றது. பல உள்ளூர் சிறு உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டு மொத்த உற்பத்தியும் வணிகமும் ஒருசில அங்காடி முதலாளிமாரின் தனியுரிமையாக மாறிவிடுகின்றது. காலப்போக்கில் சிறு உற்பத்திகள், வணிகங்கள் அழிந்து பெருநிறுவனங்களின் பிடிக்குள் மொத்த நுகர்வும் திண்டாடும் நிலைக்கு மக்கள் தள்ளப்படுவர். இது உலகமயமாக்கல் அல்லது அமெரிக்க மயமாக்கல் கொள்கைக்கு துணைபோவதாகத்தான் நீண்டகாலத்தில் அமையும். இந்த உலகமயமாக்கல் பற்றிய ஆழமான புரிதல் வலதுசாரி ஆலிம்களிடம் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அவர்கள் எப்போதும் கொழும்பு பெருமுதலாளி வர்க்கத்தைச் சார்ந்தே இயங்கி வருகின்றனர்.

**வஹாபியத் தூய்மைவாதம் என்று கூறி இஸ்லாம் காட்டியுள்ள பதிலீடுகளை மறுக்கிறீர்களா?**

நிச்சயமாக இல்லை. நான் அப்படிச் சொல்லவில்லை. எந்தவொரு சமூக நெருக்கடியையும் மேலோட்டமாகவும் எழுந்தமானமாகவும் பார்க்கக்கூடாது என்றுதான் சொல்கிறேன். அதுவும் சமய பண்பாட்டு விடயங்களில் வரலாற்றுக் கண்ணோட்டம் தேவைப்படுகின்றது. அதிலும் குறிப்பாக சமூகமாற்ற, சமூகப் புத்துயிர்ப்பாக்க பணிகளில் ஈடுபாடுடையவன் என்ற வகையில் அப்பணியில் ஈடுபடுகின்றவர்கள் அச்சமூகத்தின் வரலாறு, மொழி, பண்பாடு, சடங்குகள் போன்ற விடயங்களில் ஆழ்ந்த தெளிவு இருக்க வேண்டியது அவசியமாகும். எந்தவொரு பண்பாடும் இன்னொரு பண்பாட்டின் மோதுகையோ, கலப்போ இன்றி தனியாக வளரமுடியாது. அது சமூக இயங்கியல் விதியாகும். கொண்டும் கொடுத்தும் தழுவியும் உள்வாங்கியும் மோதியும் கட்டுடைத்தும் தான் ஒவ்வொரு பண்பாடும் வளர்ந்து செல்கின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இங்கிருந்த உள்ளூர்ப் பண்பாடுகளின் தேக்கநிலையில் இருந்தே வெளிப் பண்பாடுகளின் தாக்கம் ஏற்படுகின்றது. அக்காலத்துக்கு அத்தகைய ஏற்பும் அங்கீகரிப்பும் தேவையானதாக இருந்திருக்கலாம். ஆனால் போருக்குப் பிந்திய இலங்கை ஒரு புதிய சகவாழ்வை வேண்டி நிற்கின்றது. மற்றமைகளுடன் ஊடாடி, கலந்து வாழ வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இந்த தூய்மைவாதம் அதற்கு தடையாக மாறுகின்றது. அதிதூய்மைவாதம் பாசிஸத்திற்கே இட்டுச் செல்லும். அங்கு சமரசத்திற்கு இடமிருக்காது.

இஸ்லாம் காட்டிய பதிலீடுகள் என்பது காலத்துக்குக் காலம் தோன்றும் மறுவாசிப்புக்கள்தான். ஒரு பண்பாடு புதிய நெருக்கடிகளை

எதிர்கொள்ளும் போது உள்ளார்ந்து ஒன்றை உருவாக்கிக் கொள்வதற்கு பதிலாக வெளியிலிருந்து வருகின்ற ஒன்றுக்கு இஸ்லாமியத் தன்மையை வழங்கி, பதிலீடுகளை உருவாக்கிக் கொள்வதும் இருக்கிறது. உதாரணமாக பண்பாட்டில் நம்பிக்கைகள், வழிபாடுகள், சடங்குகள் போன்றவற்றில் புத்துயிர்ப்பாக்கமோ, பெரிய மாற்றங்களையோ செய்ய முடியாது. ஆனால் சமூகவியல் சார்ந்த விடயங்களில் மற்றமைகளிலிருந்து அல்லது வெளியிலிருந்து வருகின்ற வடிவங்களை எடுத்துக் கொள்ள முடியும். அப்படிப் பல வடிவங்களை நவீனத்துவத்திலிருந்து நாம் பெற்றிருக்கிறோம். அதிலொன்றுதான் இந்த வங்கி முறையாகும். அந்த வங்கிமுறை வட்டியை அடிப்படையாக வைத்து இயங்குவதால் அறுபதுகளில் அதை இஸ்லாமிய அறிஞர்கள் நிராகரித்தார்கள். எழுபதுகளில் வட்டி அற்ற வங்கி முறையை அங்கீகரித்தார்கள். ஆரம்பத்தில் மேற்கத்திய வங்கி முறையில் இஸ்லாமிய வங்கி என்பது ஒரு உட்பிரிவாக இருந்தது. பின்னர் தனியான வங்கியாக மாறியது. ஆரம்பத்தில் வட்டிப்பணத்தை எடுக்கக்கூடாது என்று பத்வா வழங்கினார்கள். பின்னர் எடுக்கலாம் என்றும் அதை தனிப்பட்ட தேவைக்குப் பயன்படுத்தாமல் பொதுத்தேவைக்குப் பயன்படுத்தலாம் என்றும் பத்வா வழங்கினார்கள். ஆனால் நாம் இஸ்லாமிய பதிலீடுகள் என்று கூறிக்கொண்டு மேலும் மேலும் எல்லா மக்களுக்கும் பேராபத்தை விளைவிக்கும் முதலாளித்துவ சக்திகளுக்கு முண்டுகொடுக்கும் நிலையில் எமது பதிலீட்டு செயற்பாடுகள் அமைந்துவிடக்கூடாது. அதாவது இஸ்லாமிய வங்கி என்பதும் பெரும் பணக்காரர்கள் மட்டும் பயன் பெறுவதற்கோ எந்த ஒரு சமூக நல வாழ்வாதாரத் திட்டங்களையும் முன்னெடுக்காமல் ஒரு குறிப்பிட்ட வர்க்கம் மட்டும் உழைப்பதற்கோ மற்றவர்களைச் சுரண்டுவதற்கோ இஸ்லாமிய பதிலீடுகள் உதவக்கூடாது. காலத்துக்காலம் இஸ்லாமிய பதிலீடுகளில் உள்ளுறைந்திருக்கும் சீர்கேடுகளை ஆராய்ந்து அவற்றை மறுசீரமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**உணவு என்பது இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டியதல்லவா? ஹலால் நடைமுறை அதைப்பிரிக்கிறதே?**

இலங்கை முஸ்லிம்கள் மிக நீண்டகாலமாக பல்பண்பாடுகளை இணைக்கும் உணவுக் கலாசாரம் ஒன்றைப் பின்பற்றி வந்துள்ளனர். இந்த உணவுக் கலாசாரத்தின் மூலம் சகோதர சமூகங்களுக்கு மத்தியில் ஒற்றுமையும் சகவாழ்வும் புரிந்துணர்வும் ஏற்பட்டுள்ளது. ஐவேளைத் தொழுகைக்கு மாத்திரம் அரேபியப் பண்பாட்டின் படி பள்ளிவாயலை ஏற்படுத்திக் கொண்ட அவர்கள் அதற்கு வெளியில் ஒரு மூதாதையரின்

நினைவை ஒட்டி தர்ஹா என்ற பல் பண்பாடுகளை இணைக்கும் வெளிகளை ஏற்படுத்தினர். இந்து, பௌத்த சமூகங்களுக்கும் இது பொருந்தும். குறிப்பாக முஸ்லிம்களின் தனிப்பட்ட வீட்டுக் கந்தூரிகள், பொதுக் கந்தூரிகளையும் நடாத்தியுள்ளார்கள். நோன்பு, ஹஜ், மீலாத் நபி போன்ற விசேட தினங்களிலும் மாற்றுமத சகோதரர்களை இணைத்து அன்னதானம் செய்து வந்துள்ளனர். ரொட்டி, பாட்சோறு, பலகார வகைகளோடு புரியாணி, நெய்ச்சோறு, கழியா, வட்டிலாப்பம், வாழைப்பழம், பேரீட்சம் பழம் போன்ற உணவுப் பொருட்களும் கஞ்சி, அவல் போன்ற 'நார்சா' வகைகள் முஸ்லிம் பண்பாட்டு வெளிகளில் பரிமாறப்பட்ட உணவு வகைகளாகும். இவற்றை பௌத்தர்களும் இந்துக்களும் விரும்பி உண்ணும் பழக்கமுடையவர்களாக இருந்துள்ளனர். அதேவேளை தென்னிலங்கையில் வாழும் முஸ்லிம்கள் வெசாக், பொஷன், எசல போன்ற பௌத்தர்களின் முக்கிய தினங்களில் வழங்கப்படும் அன்னதானங்கள், குடிபானங்கள் போன்றவற்றில் சமையல்காரர்களாகவும் பரிமாறுபவர்களாகவும் இருந்துள்ளனர். கடவுளுக்கென அல்லது இஷ்ட தெய்வங்களுக்கென படைக்கப்பட்ட உணவு வகைகளைத் தவிர அன்னதான நோக்கில் வழங்கப்படும் 'தன்சல்' போன்றவற்றை உண்ணலாம் என்று இலங்கை முஸ்லிம் மரபுவழி ஆலிம்கள் அக்காலத்தில் பத்வாக்களையும் வழங்கியுள்ளனர். ஆனால் இலங்கை முஸ்லிம்களுக்கு மத்தியில் ஊடுருவிய வஹாபியத் தூய்மைவாதம் முஸ்லிம்களின் இந்தப் பண்பாட்டு வெளிகளை அழித்தொழித்துவிட்டது. வஹாபியம் அறிமுகப்படுத்திய கூட்டு குர்பானி இறைச்சியைக் கூட பிற சமூகத்தவருக்கு வழங்கிய வரலாறும் கிடையாது. அதிலும் கடும்போக்கு வாதமே நிலவியது. பல்பண்பாடுகளை இணைத்து வைத்திருந்த உணவுக் கலாசாரமும் அதனோடு சேர்ந்து அழிக்கப்பட்டது. மூன்று நான்கு தசாப்தங்களுக்கு மேலாக மற்றப் பண்பாடுகளுக்கிடையே ஊடாட்டம் இல்லாது போய்விட்ட வெற்றிடத்திலிருந்துதான் இந்த ஹலால் நடைமுறை தோற்றம் பெறுகின்றது. ஆனால் உணவுக் கலாசாரத்தின் மூலமாக மற்ற பண்பாட்டைச் சேர்ந்த சமூகங்கள் மத்தியில் ஒற்றுமை நிலவிய அதே சமகாலத்தில் ஹலாலான அறுப்பு முறையும் பன்றி விலக்கு முறையும் முஸ்லிம்களிடம் இருந்து வந்ததை பௌத்தர்களும் இந்துக்களும் நன்கு அறிவார்கள். ஆனால் இந்தப் பண்பாட்டு வெளிகள் பல அழிக்கப்பட்டு இன்று ஹலால் நிருவாகப் பெறிமுறை மட்டுமே துருத்திக் கொண்டு நிற்பதால் அது இனவாத கண்களுக்கு தூக்கலாகத் தெரிவது நியாயமே. உணவுக் கலாசாரத்தின் மூலம் பண்பாடுகளுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தலாம் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால் ஒவ்வொரு பண்பாட்டுக்கும் அதனுடைய உலக நோக்கின்படி ஒரு உணவுக்

கலாசாரமும் இருக்கின்றது. அது அடுத்த பண்பாட்டின் உணவுக் கலாசாரத்திலிருந்து வித்தியாசப்படவே செய்யும். ஒரு பண்பாடு இன்னொரு பண்பாட்டைப்போல் இருக்க வேண்டும் என எதிர்பார்க்க முடியாது. ஒவ்வொரு பண்பாட்டையும் சம தளத்தில் அதன் இருப்பை மறுதலிக்காமல் ஏற்பதுதான் உண்மையான சகவாழ்வும் ஜனநாயகமுமாகும்.

**உலமா சபை மறுசீரமைக்கப்பட்டு அதன் பணிகள் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று பலராலும் எழுப்பப்பட்டு வருகிறது. இது தொடர்பில் நீங்கள் முன்வைக்கும் பரிந்துரைகள் என்ன?**

உலகளவில் அரச நிறுவனங்களாக இருந்தாலும் சரி, சிவில் நிறுவனங்களாக இருந்தாலும் சரி அவை உள்ளார்ந்த மறுசீரமைப்புக்களையும் உள்வாங்கியபடி மாறி வருகின்றன. எந்தவொரு நிருவாகக் கட்டமைப்பும் கால ஓட்டத்தில் இறுகிய நிலைக்குப் போய் தேக்க நிலை அடைவது இயல்பானது. ஆனால் ஒரு சிவில் சமூகக் கட்டமைப்பு எப்போதும் தன்னை புதுப்பித்தபடி புதிதாக எழுந்து வரும் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் மறுசீரமைத்துக் கொள்வது அவசியமாகும். குறிப்பிட்ட சிவில் சமூகக் கட்டமைப்பு எந்த சமூகத்தை, எந்தப் பண்பாட்டை பிரதிநிதித்துவப் படுத்துகின்றதோ அச்சமூகத்தின் நிகழ்கால, எதிர்கால தேவைகளையும் அபிலாஷைகளையும் கருத்திற் கொண்டு தன்னை மாற்றிக் கொண்டு முன்னகர்வது அவசியமாகும். அந்த வகையில் இலங்கை முஸ்லிம்களின் சிந்தனைக் கட்டமைப்பில், பண்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் உலமா சபையானது தற்போதைய சூழலில் மறுசீரமைக்கப்பட வேண்டியது அவசியமே. ஏனென்றால், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் தன்மை, பங்கேற்பு ஜனநாயகம் போன்றவை இன்றைய நிருவாகக் கட்டமைப்பில் வலியுறுத்தப்படுகின்ற விடயங்களாகும். அதேநேரம் இறையாண்மையுள்ள அரசில் ஒரு சிவில் சமூகக் கட்டமைப்புக்கு இருக்கின்ற அதிகார எல்லைகள் போன்றவையும் இங்கு முக்கியம் பெறுகின்றன. திடீரென சட்டத்தைக் கையில் எடுக்கின்ற அல்லது அதிகாரத்தை கையில் எடுக்கின்ற போக்கை வஹாபிய தூய்மைவாதம் எந்தவித முன்யோசனையுமில்லாது உருவாக்கிக் கொடுத்துள்ளது. காத்தான்குடி மாணவிகளை விசாரித்து தண்டித்தமையை இதற்கு உதாரணமாக கூறலாம்.

உலமா சபையின் தெரிவு முறையும் அதன் தலைமைக்கான தகுதிகள், பதவிக்காலம் போன்ற பல விடயங்கள் நாடுதழுவிய ரீதியில் இலங்கை

முஸ்லிம்களின் பல பிராந்தியங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் பங்கெடுக்கக் கூடிய வகையில் அதன் நிருவாகக் கட்டமைப்பில் ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் புலமைத்துவ சிந்தனையின் வரலாற்றுத் தொடர்ச்சி மொத்தத்தில் அறுபட்டுப் போன நிலையே இன்று காணப்படுகின்றது. நீண்ட நெடுங்காலமாக அயல் பண்பாடுகளுடன் இணக்கமாகவும் அதேநேரம் கரைந்து, இழந்து போகாமலும் வாழ்வதற்கான ஒரு மரபு ரீதியான இஸ்லாமிய சிந்தனை முறை அல்லது மக்கள் நிலைப்பட்ட இஸ்லாமிய பண்பாட்டு வாழ்க்கை முறை அழித்தொழிக்கப்பட்ட நிலையே காணப்படுகின்றது. இதிலிருந்து இன்றைய போருக்குப் பிந்திய சகவாழ்வுக்கு ஏற்ற நீண்டகால நோக்கில் பயனளிக்கக்கூடிய உள்ளூர் அறிவு, உள்ளூர்த் திறன், உள்ளூர் பண்பாடுகளுக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்பட்ட நிலையில் இஸ்லாமிய சிந்தனைப் புத்துயிர்ப்பாக்கத்தை ஆலிம்களுக்கு மத்தியிலும் ஆலிம்களை உருவாக்கும் அறபுக் கலாநிலையங்கள், அதன் பாடத்திட்ட அமைப்புக்களிலும் உலமா சபை கொண்டுவர வேண்டியது அதன் கடமையாகும்.

உலாமா சபையின் உள்ளக கட்டமைப்புக்கு வெளியே விரிந்த ஒரு வலையமைப்பையும் அது எதிர் காலத்தில் உருவாக்கிக் கொள்வது அவசியமாகும். அதாவது உலமா சபையை பிரநிதித்துவப்படுத்துகின்ற வகையில் சமயத்துக்கப்பாலும் இலங்கைச் சமூகங்களின் பிரச்சினைகளைக் கையாளுகின்ற மனித உரிமையாளர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், பிற சமயத் தலைவர்கள், துறைசார்ந்த நிபுணர்கள் போன்றவர்கள் அடங்கிய பெரிய சபை ஒன்றையும் உருவாக்க வேண்டும்.

இலங்கையில் சிங்களவர்களாயிருந்தாலும் தமிழர்களாயிருந்தாலும் அடிநிலை மக்களுடன் இலங்கை முஸ்லிம் மக்களும் போர்க்காலத்திலும் சரி போருக்குப் பின்னரும் சகவாழ்வுடனேயே வாழ்ந்து வருகின்றனர். ஆனால் முஸ்லிம்களைப் பிரதிநித்துவப்படுத்துகின்ற நிறுவனங்களுக்கும் மற்ற சமூகங்களின் சமய நிறுவனங்களுக்கும் இடையே இதுகாலவரை எந்தவித ஊடாட்டங்களோ சிநேகபூர்வமான பண்பாட்டு உரையாடல்களோ நடைபெறவில்லை. இதுவும் அண்மைய நெருக்கடிகள் உணர்த்துகின்ற மிக முக்கியமான அம்சமாகும். எனவே பௌத்த சமயபீடங்களுடன் உலமா சபையும் சிநேகபூர்வமான உரையாடல்களையும் சந்திப்புக்களையும் ஏற்படுத்த வேண்டும்.

உலமா சபையோ அல்லது இலங்கையில் புத்துயிர்ப்பாக்கப் பணியில்

நீண்டகாலமாக இயங்கிவரும் இஸ்லாமிய அமைப்புக்களோ பெரும்பான்மை சமூகத்திற்கு இஸ்லாத்தைப்பற்றிய நல்ல புரிதலை உருவாக்குவதற்கு காத்திரமான நிலையான ஊடகங்களை இதுவரை உருவாக்கி வழிநடத்தாதன் காரணமாக இன்று ஷரிஆவைப் பற்றியோ, ஹலாலைப் பற்றியோ அல்லது இலங்கை முஸ்லிம்களின் வரலாறைப் பற்றியோ பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த இனவாத அமைப்புக்கள் பரப்பிவருவதே உண்மையான இஸ்லாமாக, வரலாறாக நினைக்க வாய்ப்பிருக்கிறது. இந்த நிலை இனிவரும் காலங்களில் மாற வேண்டும். அதற்கான உபாயங்களைப் பற்றியும் உலமா சபை சிந்திக்க வேண்டியுள்ளது.

உலமா சபை நெருக்கடிகளை எதிர்நோக்கும் போதெல்லாம் பாரம்பரிய மேட்டுக்குடி வர்க்கத்தின் அணுகுமுறையையே கையாண்டு வருகிறது. பிரச்சினையை நேரடியாக அணுகுவதற்கான திராணி இல்லாததால் பின்கதவால் சென்று பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சிப்பதை தவிர்க்க வேண்டும். இன்று சிறு சமூகங்கள், விளிம்பு நிலை மக்கள் வெகுஜனப் போராட்டங்களை சாத்வீகமான எதிர்ப்பு முறைகளைக் கையாண்டு தமது உரிமைகளை வென்றெடுக்கின்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. உலமா சபைக் காரியாலயத்திற்கருகிலேயே பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த சிறுசமூகங்கள், விளிம்பு நிலை மக்கள் வீதியில் இறங்கி தமது கோரிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுப்பதைக் காணமுடியும். ஆனால் பழமைவாத மத்ரஸா கல்வி முறையும் மரபு வழிப்பட்ட முஸ்லிம் முதலாளித்துவ சிந்தனை முறையும் பிரச்சினைப் படுத்துபவனுக்கு காசைக்கொடுத்து வாயை அடைக்கின்ற சூழல் ஐம்பது வருடங்களுக்கு முன்பு பொருத்தமானதாக இருந்திருக்கலாம். ஆனால் இன்றைய நிலை அவ்வாறானதல்ல. குறிப்பிட்ட அரசியல் கட்சியையோ அல்லது குறிப்பிட்ட ஒரு அரசியல்வாதியையோ மட்டும் நம்பி அரைநூற்றாண்டுக்கும் மேலாக முஸ்லிம் சமூகத்தின் சிவில் சமூகக் கட்டமைப்பாக வளர்ச்சியடைந்துள்ள உலமா சபையானது அதன் கணக்கறிக்கை உட்பட அனைத்தையும் ஒப்புக் கொடுப்பது விவேகமானதல்ல. ஏனெனில் சிவில் சமூக அமைப்பானது நேரடித்தன்மையுடன் களத்தில் இறங்கி சாத்வீகமாக போராடும் போதே சிவில் சமூகத்தின் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டு குறித்த சமூகங்கள் அதில் பங்கேற்பதற்கான வழியும் பிறக்கும். அதிலிருந்து உருவாகின்ற தலைமைகள் தான் தொடர்ந்தும் உலமா சபையில் தலைமை தாங்கும் நிலையும் ஏற்படும். இல்லாவிட்டால் திரைமறைவில் எதையாவது கொடுத்து பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவந்தால் உலமா சபையின் தலைவர்களும் திரைமறைவு தன்மை கொண்ட தலைமைகளாகவே

தொடர்ந்தும் உருவாகும் நிலை ஏற்படும்.

ஹராம்-ஹலால் என்பது ஒரு முஸ்லிமின் வாழ்வின் அனைத்துப் பரிமாணங்களோடும் தொடர்புபடுவதாகவே இஸ்லாமிய சிந்தனையாளர்கள் விளக்கியுள்ளனர். குறிப்பிட்ட சில உணவுப் பொருட்களோடு மாத்திரம் அது சுருங்கிய ஒரு கருத்தாக்கம் அல்ல என்பதே அவர்களின் வாதமாகும். ஹராம்-ஹலால் தொடர்பில் செய்யப்பட்ட ஆய்வுகள் அனைத்தும் உணவுப் பொருட்கள், ஆடை, அழகுசாதனப் பொருட்கள், உறையுள், உழைப்பு, திருமண உறவுகள், குழந்தை வளர்ப்பு, சடங்குகள், நம்பிக்கைகள், பொருளாதார ஒப்பந்தங்கள், மகிழ்வளிப்பு, சமூக உறவுகள், புறச்சமய உறவுகள் என விரிந்த தலைப்புகளில் விளக்கங்களைத் தருகின்றன. எனவே ஒரு முஸ்லிமின் வாழ்வியலோடு மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கும் இந்த ஹலால் கருத்தாக்கம் ஒரு அமைப்பியலாக மாறுகின்ற போது பல்லின பண்பாடுகளுக்கு மத்தியில் நெருக்கடிக்குள்ளாகின்ற வேளையில் எத்தகைய உபாயங்களை எடுக்க வேண்டும் என்பதும் மிகுந்த கவனத்தைப் பெறுகின்ற விடயமாகும். இலங்கை முஸ்லிம் சமூகத்தின் சமயம் சார்ந்த சிவில் சமூக கட்டமைப்பாகக் கருதப்படும் உலமா சபை முஸ்லிம் சமூகத்தின் ஒரு சமய உரிமையாக, நெடுங்காலமாக கடைப்பிடிக்கப்படும் ஹலால் உரிமையை விட்டுக்கொடுத்து பின்வாங்குவதும் மேலும் மேலும் முஸ்லிம்கள் நலிவடையும் நிலைக்கே இட்டுச் செல்லும். அதேநேரம் ஜனநாயக சோஷலிச அரசாக கருதப்படும் நாட்டில் ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதும் அவற்றுக்கு உத்தரவாதமளிப்பதும் அரசின் தார்மீகக் கடமை என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

இஸ்லாம் குறித்து 'கற்பிக்கபபட்ட பொதுப்புத்தியில் மிகமுககியமானது: இஸ்லாம் ஒற்றைப் பார்வை கொண்ட மார்க்கம் என்பதாகும். ஆனால் முஸ்லிம்கள் மதமோ. கலை இலக்கியமோ. அரசியலோ. எந்த சமூக பிரச்சினைகளையும் இறுக்கமான ஒற்றைக் கருத்துடன் அணுகுவதில்லை. மற்றெல்லாச் சமூகங்களையும் விட. முஸ்லிம்களுக்குள் ஒவ்வொரு சமூக பிரச்சினைகள் குறித்து ஏராளமான வாதப் பிரதி வாதங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்ற வெளிச்சத்தில். ஏ.பி.எம். இத்ரீஸ் அவர்கள் இக்கட்டுரையில் முன்வைக்கும் புள்ளிகள் கவனத்துக்குரியவை. – கீரன். ஐக்கிய இராச்சியம்

எல்லாப் பிரச்சினையும் வெளியில் இருந்துதான். தாங்கள் வெகுசுத்தம். தமது பிழைகளை வெளிப்படையாக ஒத்துக் கொள்ள. வெளிப்படையாகப் பேச மறுக்கும். சமூக ஆதிக்க குழுக்களுக்கு/தனி மனிதர்களுக்கு மத்தியில். இந்த மோசமான உளவியல் மனோபாவத்தினை தகர்த்தெறியும் சகோதரர் ஏ.பி.எம். இத்ரீஸ் அவர்களின் கருத்துப்பலமும் மனோபலமும் கொண்ட எழுத்துக்கள். இலங்கை முஸ்லிம்கள் சமகாலத்தில் எதிர்கொள்கின்ற பல நெருக்கடிகளை புரிந்து கொள்ள உதவும் முக்கியமான பதிவுகள் என்பது எனது கருத்து!
– எம். பௌசர். ஆசிரியர். எதுவரை. ஐக்கிய இராச்சியம்

ஒரு காலத்தில் நானும் இத்தகைய தூய்மைவாதக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு அந்தப் பட்டறையின் சில அப்பியாசங்களையாவது பின்பற்றியவன்தான். அதன் எளிமை – சிக்கலான கருத்தாக்கங்களுக்குள் கொண்டு செல்கின்றவர்கள் பிற்போக்கானவர்கள் என்ற ரீதியில் என்னைச் சிந்திக்கத் தூண்டியதும் உண்மை. ஆனால், சிந்திக்கத் தொடங்கும் தருணங்களில் இஸ்லாம் அதன் அடிப்படையான குர்ஆன் மற்றும் நபி வழிகள் உலகப் பொதுவானவை என்ற தர்க்கம் – பல் பண்பாடுகளுடன் தன் அடிப்படைகளில் மாற்றமின்றியும் அதே சமயம் அது இயைந்தும் செல்வதில்தான் தங்கியுள்ளது எனத் தோன்றியது. அதற்கான விரிந்த வாசிப்பையும் (அல்லது மீள் வாசிப்பு) சிந்தனையையும் மறுதலிக்கும் ஒரு மார்க்கமாக இஸ்லாம் இருக்கவே முடியாது. இன்னும் பல பரிமாணங்களைக் காட்டும் ஒரு கட்டுரையாக இது விளங்குகிறது. ஏ.பி.எம். இத்ரீஸ் (நளீமி) அவர்களின் சிந்தனைகள் தூரநோக்குடையவை. இதை விட இறுக்கமான சூழ்நிலை அபத்தங்களுக்குள் இலங்கை முஸ்லிம்கள் சிக்கிக்கொள்ளும் ஒரு காலத்தில் அவரது சிந்தனைகளின் முக்கியத்துவம் உணரப்படுவதில் பிரயோசனங்கள் குறைவாகவே இருக்கும். எனவே. மார்க்க விஷயங்களில் புத்திஜீவிகள் எனக் கருதப்படுவோரும் அதிகார மட்டங்களில் இருப்போரும் இவருக்கு என்ன மறுப்புரை எழுதலாம் அல்லது எந்தக் குத்பாவில் இவருக்கெதிராக என்ன பிரசங்கம் செய்யலாம் என யோசிப்பதை விடுத்து, அவரது கருத்துக்களில் இப்போதே கவனம் கொள்வது நலம்!
– எம்.ஐ. ஷாஜஹான். ஓட்டமாவடி

வஹாபியத் தூய்மைவாத அரசியலை நுணுக்கமாகத் தோலுரித்துக்காட்டும் பிரதி. வஹாபிஸ்டுகளின் வலைகளிலிருந்து விடுபடுவதன் அவசியம் மறுதலிக்க முடியாத காலத்தின் தேவையாக மாறியிருக்கிறது... – இமாம் அத்னான். மருதமுனை

முஸ்லிம்களின் அரசியல் அமைப்புக்கள் தம்மை ஏனைய ஒடுக்கப்படும் சமூகங்களிலிருந்து தனிமைப்படுத்திக் கொள்ளாமல். எல்லா ஒடுக்கப்படும் மக்களுடைய போராட்டங்களிலும் தம்மை இணைத்துக்கொண்டு இலங்கையின் பேரினவாத ஒடுக்குமுறையை முறியடிப்பதன் மூலம் மட்டுமே சனநாயக விரோத ஆட்சி ஒன்றின் அடிப்படைகளையும் இனப்பிளவுகளையும் இலங்கையிலிருந்து அகற்ற மு...

ISLAMIC BOOK HOUSE
Tel:0112684851
Rs: 80
00033682-1
Halal Nad imuraiyum Savalhalum-Idrees
27.03.2017